வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

சுதந்திரன்
SUTANTIRAN
194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஐப்பசி திங்கள் 15-ம் நாள் (1—11—1959) ஞாயிற்றுக்கிழமை ந. ஆகிர் பிறை 2 இதழ் 22

# ஜயசூரியாவை பிரதமராக்க உள்ளுக்குள்ளே பிரமப் பிரயத்தனம்

## நிதி அமைச்சர் விரைவில் வெளியேற்றப் படலாம்

### தஹநாயகாவை நோக்கி திரண்டு வரும் நெருக்கடி

(சுதந்திரன் நிருபர்)

பிரதமர் திரு தஹநாயகாவை நோக்கிப் பல்வேறு நெருக்கடிகள் திரண்டு வருகின்றன. அவற்றிலிருந்து அவர் கடைத்தேறுவது துர்லபம் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். வெகு விரைவில் இன்றைய சுகாதார அமைச்சர் திரு ஏ. பி. ஜயசூரியாவைப் பிரதமராக்கிவிட உள்ளுக்குள்ளேயே ஒரு கோஷ்டி பிரமப் பிரயத்தனங்கள் செய்துவருவதாக அறியப்படுகிறது.

பிரதமர் திரு தஹநாயகா, அரசாங்கக் கட்சியை எவ்வளவுதான் கட்டிக் காப்பதற்கு முயற்சிகள் செய்த போதிலும் உள்ளுக்குள்ளே பிளவும், கோஷ்டி மனப்பான்மையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

திரு தஹநாயகாவைப் பதவியிலிருந்து தள்ளிவிட்டு, அந்த இடத்தில் சுகாதார அமைச்சர் திரு ஏ. பி. ஜயசூரியாவைப் பிரதமராக்கிவிடப் பலம்பெற்ற கோஷ்டியொன்று உள்ளுக்குள்ளேயே உரம் பெற்று வருகிறது.

இந்தக் காரியத்தை மூன்று வழிகளில் செய்யலாம் என்று பிரஸ்தாப கோஷ்டி திட்டமிடுவதாகத் தெரிகிறது.

#### மூன்று வழிகள்

1. திரு ஏ. பி. ஜயசூரியாவை செனட்சபையிலிருந்து ராஜினமாச் செய்வித்து நியமன அங்கத்தவராகப் பாராளுமன்றத்துக்குள் முதலில் கொண்டுவருவது ஒரு வழி.

2. அத்தனகலைத் தொகுதிக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் ஆதரவுடன் போட்டியிடும்படி செய்து அதன் மூலம் பாராளுமன்றத்துக்குள் கொண்டு வருவது இரண்டாவது வழி.

3. அரசமைப்புச் சட்டத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்து அதன் மூலம் செனட்சபையிலுள்ள மந்திரியொருவர் பாராளுமன்றத்திலும் பிரசன்னமாயிருக்கலாம் என்று வேண்டிய சட்ட வசதியைத் தேடிக்கொள்வது மூன்றாவது வழி.

#### இடைத் தேர்தலில் குதிக்கலாம்

நியமன அங்கத்தவராக ஆவதற்கு தற்போதயப் பிரதமரின் பொரா கம் அங்கீகாரமும் வேண்டுமாதலாலும், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமாதலாலும் முதலாம் மூன்றும் வழிகள் சாத்தியமானவையல்ல. எனவே, அத்தனகலைத் தொகுதிக்குப் போட்டியிடும்படி திரு ஜயசூரியா தூண்டப்படலாம் என்று நம்பப்படுகிறது.



செனட்டர் ஏ. பி. ஜயசூரியா

திரு ஜயசூரியா பாராளுமன்றத்துள் வந்துவிட்டால் பின்னர் பிரதமர் தஹநாயகாவை வெளியேற்றுப்படலம் ஆரம்பமாகும்.

#### ஸ்டான்லி

இதே கோஷ்டி நிதியமைச்சர் திரு ஸ்டான்லி டி சொய்ஸாவையும் வெளியேற்றிவிட முயற்சிக்கிறது. இந்த முயற்சி அதிவிரைவில் பலன் தரலாம் என்று அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

திரு ஸ்டான்லி டி சொய்ஸா ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவராக விருப்பதும், விலக்கப்பட்ட திருமதி விமலா விஜயவர்த்தனவுக்கு அவர் ஆதரவாக நிற்பதும் அவரை பதவியிலிருந்து தள்ளிவிடவேண்டும் என்ற கிளர்ச்சி வலுப் பெறுவதற்குக் காரணங்களாம்.

#### ஸ்தானிகர்?

திரு ஸ்டான்லியைப் பதவியிலிருந்து தள்ளினால் கத்தோலிக்க சமூகம் அதிருப்தியடையலாம் என்ற உண்மை சுட்டிக்காட்டப்பட்டபோது, 'அப்படியானால் அவரை ஒரு ஸ்தானிகராக வெளிநாட்டுக்கு அனுப்பிவிடவேண்டியதுதான்' என்று பிரதமர் திரு தஹநாயகாவுக்கு ஆலோசனை கூறப்பட்டதாம்.

#### சட்டத் திருத்தம்

திரு. ஏ. பி ஜயசூரியா ஒரு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியாக அல்லாமல் ஒரு செனட்டராக விருப்பதால் அவரைப் பிரதமராக்குவது அரசமைப்புச் சட்டவிதிகளுக்கு ஏற்றதா என்ற விஷயமும் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கை அரசமைப்புச் சட்டப்படி ஒரு மக்கள் பிரதிநிதிதான் பிரதமராக வரவேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறதா? செனட்டிலிருந்து இரண்டு அமைச்சர்கள் மந்திரிசபையில் இடம் பெறலாம் என்றுதான் இருக்கிறது. ஒருவர் சட்ட மந்திரி. மற்றவர் பிரதம மந்திரியாகவும் இருக்கலாம் என்று வாதிக்கப்படுகிறதாம்.

இதற்கு உதாரணமாக சென்னை அரசாங்கம் சுட்டிக் காட்டப்பட்டது.

#### சென்னை சமாசாரம்

திரு காமராஜர் சென்னை சட்டசபையில் பிரதமராக வருவதற்கு முன் ராஜாஜி பிரதமராகவிருந்தார். அவர் மேல சபை மூலமாகவே பிரவேசித்துப் பிரதமரானர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு ஏ. பி. ஜயசூரியாவைச் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக்கவும் அதன் மூலம் பிரதமர் பதவிக்கு அவருக்கு உள்ள பாத்தியதையை அதிகப்படுத்தவும் முயற்சிகள் நடைபெறுகின்றன என்றும் தெரிகிறது. திருமதி சிறீமாவோ பண்டாரநாயகா திரு ஏ. பி. ஜயசூரியா சுதந்திர கட்சியின் தலைவராவதை ஆதரிக்கிறாராம்.

## 55 வயதுக்குப் பின்னரும் வேலை செய்யும் வாய்ப்பு

### பொது மராமத்து இலாகா ஓவஸியர்களுக்கு மறுப்பு

[சுதந்திரன் நிருபர்]

பொதுமராமத்து இலாகா ஓவஸியர்கள் இனி மேல் 55 வயதை அடைந்ததும் கண்டிப்பாக சேவையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் எதிர் பார்க்கிறது. இதன்படி இம் மாதம் பல ஓவஸியர்கள் பதவி இழக்கிறார்கள்.

அரசாங்க சேவை விதிப்படி எந்த அரசாங்க ஊழியரும் 55 வயதை அடைந்தவுடன் பதவியிலிருந்து விலக

(8-ம் பக்கம் பார்க்க)



## அசுத்த இரத்தம்?

### வேதனை தரும் பல பயங்கரமான நோய்களுக்குக் காரணமாகிறது!



இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் அகற்றப்படாவிட்டால அவை அங்கு பெருமளவில் தேங்கிக்கிடந்து நச்சுத் தன்மையை உண்டாக்கி விடுகின்றன. அதனால் கடுமையான வியாதிகள் பல ஏற்பட ஏதுவாகின்றன.

- வாத நோய்கள்: இடுப்புப் பிடி, சந்து, வாதம், இல் வாயு, கை கால் பூட்டுகளில் பிடிப்பு—நோவு.
- இரத்த நாள இறுக்க நோய்: இரத்தக் கொதிப்பு, இரத்தக் கட்டுத் தொந்தரவுகள்.
- மந்தமான இரத்த ஓட்டம்: சோர்வு, பித்த மயக்கம், அசதி, நரம்புத் தடிப்பு, நரம்பு சுருளல், புண், பிளவை, கட்டி.
- சரும வியாதிகள்: பருக்கள், தேமல்கள், சொறி சிரங்குகள் (ECZEMA)
- மூலம்: உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம்.




### ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் (Richelet's Blood Purifier)

இரத்தத்தை சுத்திகரிக்கவும், அதற்கு சக்தியூட்டவுமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது உடம்பில் எந்தப் பாகத்திலுமுள்ள நோய் நஞ்சையும் நீக்கி உடம்பைச் சீர்படுத்துகிறது. உள்ளூர ஏற்பட்ட நச்சுத் தன்மையால் உண்டாகும் நோய்களின் வலிகள்—வருத்தங்கள் படிப்படியாக ஒழிக்கப்படுகிறது இம் மருந்தினல். மேலே சொன்ன எந்த ஒரு வியாதியால் கஷ்டப்படும் நோயாளியும் ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் உபயோகிக்கவேண்டும். பூரண சுகம், பலம், சந்தோஷம் அப்பொழுது நிச்சயம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,
63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் அமரர் கு. வன்னியசிங்கம்:

# தென்னகத்தில் தமிழ்ப்பணி நடக்கிறதே என்று நாம் இங்கு சும்மா இருப்பதா?

## நமது சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ற கலைச் சொற்களை நாமே ஆக்கிக் கொள்ள வேண்டும்

## அரசாங்க மொழித் திணைக்களத்தில் உள்ள இரண்டு அதிகாரிகளின் அநீதியான நடவடிக்கைகள்

**காலஞ் சென்ற தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கடைசிப் பேச்சின் முதல் ஐந்து பகுதிகள் ஏற்கனவே சுதந்திரனில் வெளியிடப்பட்டுவிட்டன. இன்று இங்கு ஆறுவது பகுதி தரப்படுகிறது.**

**இதுபற்றி இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். பத்திரிகை தணிக்கை அமுலில் இருந்த சமயம் திரு. வன்னியசிங்கத்தின் இப்பேச்சை நாம் வெளியிடக் கூடாது என்று தகுதிவாய்ந்த அதிகாரி மிக்க கண்டிப்பாகத் தடை விதித்திருந்தார்.**

திரு வன்னியசிங்கம்: செக்ரட்டேரியட் கட்டடத்திலுள்ள அரசாங்க அலுவலகங்கள் சிலவற்றின் பெயர்கள் சிங்களத்திற் பெரிய கொட்டை எழுத்துக்களிலும் தமிழிற் சிறிய எழுத்துக்களிலும் இடப்பட்டு வருவதைச் சமீபத்தில் அவதானித்தேன். இது தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தாராளமான சலுகையாயிருக்கலாம், ஆனால் சில கந்தோர்களின் பெயர்கள், உதாரணமாக கல்வி மந்திரியாரின் கீழுள்ளவற்றின் பெயர்கள், சிங்களத்தில்மாத்திரந்தானுண்டு. கல்வி மந்திரியார் தமிழ்த் துவேஷத்தில் ஊறிவிட்டார்.

இத் தொடர்பில் வேறும் சில விடங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய பிரதம மந்திரியாரின் வாக்குறுதிகளைப் பற்றி "இந்துப்"பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்திற் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று விடயங்களை இச் சபையாரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அத்தலையங்கத்தில் உள்ளவாறே தருகிறேன்:-

### 'இந்து' பத்திரிகை தலையங்கம்

"திரு நேரு அதிகாலக் கருத்துக்கள் எப்படி இந்தியில் மொழி பெயர்க்கப்படுகின்றன என்பது பற்றியும் உதாரணங்கள் காட்டிப் பேசியுள்ளார்—'வீதிச் சந்தியை அல்லது ரயில் வண்டி நிலையங்களில், எவரும் விளங்கிக்கொள்ள முடியாத, முக்கியமாகப் பொது மக்கள் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாத, கரடு முரடான இயற்கையோடொவ்வாத பெரும் நீண்ட சொற்கள் இடப்படும் கொடுமையைக் காண்கிறேன்,' எனக் கூறினார்.

"அவர் தம் பேச்சைத் தொகுத்துக் கூறும்போது 'புதிய சொற்களை ஆக்கும் அரும்பணி தகைப்புக்கிடமான அளவுக்குச் சென்றிருக்கிறது போல எனக்குத் தோற்றுகிறது' என்றார்.

"இக் கூற்று தென் இந்தியாவிலுள்ள எம் மொழி வெறியர் சிலர் எமக்கு ஆக்கியுள்ள சொற்களைப் பொறுத்தவரையிலும் ஓரளவு பொருந்தும். வழக்கிலுள்ள நல்ல மொழி மற்றும் மொழிகளிலுள்ள திறமையான சொற்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் மேலும் வளம் பெறுகிறது; இவ்வாறு வளம் பெற்ற ஒரு மொழியே ஆங்கிலமாகும்.

"வழக்கில் வந்துவிட்ட பிற மொழிச் சொற்களை நீக்கி அவற்றுக்குப் பதிலாக 'தூய்மையான' சொற்களைத் திட்டமிட்டு வலிந்து ஆக்கிப் புகுத்துதல் அம் மொழியைக் கற்போரின் ஊக்கத்தைக் கெடுப்பதோடு சிரிப்புக்கிடமான செயலுமாகும்."

### தமிழ் ஆக்கப் பணி இங்கு ஏன்?

"இந்துப்" பத்திரிகையின் தலையங்கத்திலுள்ள இப்பகுதியை நான் எடுத்துக் காட்டியது ஒரு விஷயத்தை உணர்த்துவதற்காகவே. கலைச் சொற்கள் ஆக்குவதற்காய தமிழ்ப் பணியாளர் தொகை போதாதென முன்னர் ஒரு முறை இச் சபையில் நான் பேசியபோது, அப்பொழுது பாராளுமன்றக் காரியதரிசியாயிருந்த மாத்தளை அங்கத்தவர் (திரு நிமால் கருணாதிலகா), தமிழ் தென் இந்தியாவிற் பேசப்பட்டு வருகின்றமையினாலும், இங்கு ஆக்கப்படுகின்ற நூல்களும் கலைச் சொற்களும் போன்றவை அங்கே இருப்பதனாலும், இத் தமிழ்ப் பிரிவு குறைந்த தொகையான பணியாளருடன் தொழிற்படலாம் என, அரசாங்கச் சார்பிற் கூறினார்.

திரு நிமால் கருணாதிலகா: (மாத்தளை): தமிழருக்குத் தேவையான கலைச் சொற்றொகுதிகள் யாவும் அவர்களிடமுண்டு.

திரு வன்னியசிங்கம்: தென் இந்தியாவில் நடைபெறும் "கொடுமையை" எடுத்துக் காட்டும் தலையங்கத்தை இதற்காகவே வாசித்துக் காட்டினேன். அங்கு ஆக்கப்படுவனவற்றை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: ஆங்கிலத்தைப் பொறுத்தவரையிலும் இது பொருந்தும்.

### கேத்திர கணிதம்

திரு வன்னியசிங்கம்: ஆங்கிலச் சொற்களுக்கும் இது பொருந்தும். உதாரணமாக தென் இந்தியாவில் வெளியான கேத்திர கணிதப் புத்தகமொன்றைப்பார்த்தேன். அங்கே அவர்கள் "ஜியோமெற்றி" என்ற சொல்லை அப்படியே கையாண்டிருக்கிறார்கள். அவ்வாறு கிடங்கில் விழாமலும், தாம் ஆக்கிய சொற்களின் கருத்துப் பற்றித் தமக்கிடையிலேயே முரண்படும் அறிவு மிக்க நூலாசிரியர்களினதும் பண்டிதர்களினதும் கடும் சொற்றொடர்களையும் நீண்ட சொற்களையும் விலக்குவதிலும் கவனமாயிருத்தல் வேண்டும்.

திரு பி. பி. டி. சில்வா: அது கிரேக்க மொழியிலிருக்கலாம்.

திரு வன்னியசிங்கம்: 'ஜியோமெற்றி' என்பது இப்பொழுது ஆங்கில அகராதியிற் காணப்படும் ஒரு ஆங்கிலச் சொல்.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: வேறு பல ஆங்கிலச் சொற்கள்போல இவையும் இலத்தீன் அல்லது கிரேக்க மொழியிலிருந்தே வந்தன.

திரு வன்னியசிங்கம்: பெரும்பாலான ஆங்கிலச் சொற்கள் இலத்தீன் மொழியிலிருந்தே வந்தன—என் நண்பருக்கு இது தெரியும். "ஜியோமெற்றி" என்பது ஆங்கிலச் சொல்லன்று என அவர் கருதுவாராயின் அது அவர் தவறாகும்.

### தமிழ்

தமிழ் மொழியைப்பற்றி ஓரளவு தெரிந்தவர்கள், கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது வழக்கிலிருக்கும் குறித்த சில சொற்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்தன எனக் கூறுவர். கிழக்கு மாகாண முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தமிழரும்கூட அச்சொற்களை வழங்குகின்றனர். இது உலகத்தின் வேறு பாகங்களில் பேசப்படும் தமிழ் மொழியிலும் பார்க்கச் சிறந்த மொழியமைப்பைக்கொண்டது.

திரு பி. பி. டி. சில்வா: வழக்கிழந்த தமிழ்

### அரசாங்கத்தின் கடமை

திரு வன்னியசிங்கம்: வழங்கிவரும் தமிழ். தமிழ் மக்கள் நாட்டின் முன்னேற்றத்திற் பெரும் பங்கெடுக்க வேண்டியவர்கள்; அவர்களுடைய மொழியை ஆதரிக்க வேண்

(10-ம் பக்கம் பார்க்க)


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.


# புத்தகங்கள் பத்திரிகைகள் படிக்க மட்டுமா நூலகங்கள்?

## அவைகளைப் பல வழிகளில் பயன்படுத்தலாம்

### அமெரிக்காவில் உள்ளது முன்மாதிரி காட்டுகிறது

நூல் நிலையம் என்பது அமெரிக்காவில் இன்று நூல்களை இரவலாகப் பெறும் இடமாக மட்டும் இல்லை; புத்தகத் தொகுப்புகள் உள்ள புத்தகசாலையாக மாத்திரம் அது விளங்கவில்லை. கால மாறுதலுக்கு ஏற்ப, நூலகங்களின் பணியும விரிவடைந்து வருகிறது.

### பயன்

கென்டக்கி ராஜ்யத்தில் லூயிவில் என்னும் இடத்திலுள்ள இலவசப் பொது நூலகமே நூலகப் பணியை விரிவுபடுத்தும் துறையில் வழிகாட்டியது. அந்த நூலகத்துக்குச் செல்வோர் பலவிதப் பயன்கள் அடைகின்றனர். அவர்கள் அங்குள்ள புத்தகங்களை எடுத்துப் படிக்கலாம்; தாங்கள் தேர்ந்தெடுக்கும் திரைப் படத்தைப் பார்க்கலாம்; அங்குள்ள ஓவியக்கூடத்திற்குப் போகலாம்; நூலகத்தைச் சேர்ந்த தொழிற்கூடத்திற்குச் சென்று நூலகத்தின் பொருள்களைக்கொண்டு வர்ணப் படம் வரையலாம்; கிராமபோன் இசைத்தட்டுகளின் இன்னிசை கேட்கலாம்; அமர்ந்திருந்து டெலிவிஷன் காணலாம்.

### நவீன வசதிகள்

புத்தகங்களையும், இசைத் தட்டுகளையும், திரைப்படச் சுருள்களையும் அவர்கள் இரவலாகப் பெற்று, தங்கள் வீடுகளுக்குக் கொண்டு சென்று பயன்படுத்தலாம்.

நூலகத்துக்கு இரண்டு ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றின் ஒலிபரப்புகளை ரேடியோவில் கேட்கலாம்; நூலகத்தின் கல்வித் திட்டத்தைச் சேர்ந்த டெலிவிஷன் நிகழ்ச்சிகளையும் காணலாம.

### தனி ஒரு நூலகம்

அமெரிக்காவிலுள்ள பொது நூலகங்களெல்லாம் லூயிவில் பொது நூலகம் செய்வதுபோன்ற பணிகளையெல்லாம் செய்யவில்லை. ஆதலால், இது பொது நூலகங்களுக்குச் சரியான உதாரணம் என்று சொல்ல முடியாது. எனினும் நூலகங்கள் இன்று செய்து வரும் புதுமையான பணிகளின் தன்மையை இது அதிகமாகக் காட்டுவதாகும்.

### ஓவியங்கள் ஒலிப் பதிவுகள்

நூலகம் சிறந்த ஓவியங்களின் பிரதிகளைத் தொகுத்து வைத்துள்ளது. அவற்றை ஒரு மாத காலத்துக்கு இரவலாகப் பெறலாம். பிள்ளைகள் உலகத்தின் சிறந்த ஓவியங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு இது பயன்படும்.

நாடாவில் பதிவு செய்யப்பட்ட நூலகத்தின் இசைத் தொகுப்பு எங்கும் கிடைக்கும். நூலக வானொலி நிலையங்கள் இரண்டும் நாடாவில் பதிவு செய்யப்பெற்றவைகளை ஆண்டு முழுவதும் வாரத்தின் ஏழு நாட்களும் நாளொன்றுக்கு 12 மணி நேரம் ஒலிபரப்புகின்றன.

இனிய பாட்டுகளும், சிறந்த விரிவுரைகளும், விவாத அரங்குகளின் நிகழ்ச்சிகளும், புத்தகங்கள், நாடகங்கள் முதலியவற்றின கருக்கங்களும் வேறு பலவும் ஒலிபரப்பப்படுகின்றன.

லூயிவில் இசைக் குழுவின் இசையரங்குகளும, கென்டக்கி இசைச் சங்கத்தின் நிகழ்ச்சிகளும் லூயிவில் பல்கலைக் கழக விரிவுரைகளும் பதிவு செய்யப்பட்டு, நூலகப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

### ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்

நூலகத்தின் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைப் பள்ளிக்கூடங்கள் பயன்படுத்துகின்றன. நூலகம் 1958 செப்டம்பரில் கல்வித்துறை டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தொடங்கியது. அது முதல் வாரத்துக்குப் பதினைந்து டெலிவிஷன் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொன்றும் அரை மணி நேர நிகழ்ச்சி. கண்டு கேட்டுப் படிக்கத் துணை செய்யும் நூலகப் பிரிவு வகுப்பறைப் படிக்கு அகலமான பிலிம்களையும், ஒலிப் பதிவுகளையும் தயாரித்துப்

(7-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்




இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இதுடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய நோட்டீஸ் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர் 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

அ. கிருஷ்ணபிள்ளை, குப்பிளான்

கே: மக்கள் அரசாங்கத்துக்கு வரைவிலக்கணம் கூறுக.

ப: மதில் கட்டி உயிர் வாழும் அரசாங்கம் மக்கள் அரசாங்கம் எனப்படும்.

ஃ

பி. எம். இஸ்மாயில், வாழைச்சேனை

கே: குயுக்தியாரே நான் பொதுநல சேவை செய்ய விரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: முதலில் உமது சேவா நோக்கத்தைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்த வேண்டும். அதற்கப்புறம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கோட்டடி சுப்பிரமணிய ஐயரிடம் பாடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஃ

இடையர்கோன், நெடுந்தீவு

கே: வீரத் தலைவர் வன்னியசிங்கத்தின் இறுதிச் சடங்கில்கூட மாஜித் தமிழர் தலைவர் கலந்துகொள்ளவில்லையாமே காரணம் என்ன?

ப: "சத்தியாக்கிரக வீரரே! தமிழினத்தின் நல்வாழ்வுக்காக தன் இறுதிமூச்சுவரை அந்தரங்க சுத்தியுடன் போராடிய ஒரு புனித வீரரின் பூதவுடலைத்தானும் தரிசிக்க உமது புன் கண்களுக்கு தகுதி கிடையாது. எனவே அங்கு தலைகாட்டாதீர்" என்று அவரது மனச்சாட்சியே அவரைத் தடுத்து நிறுத்தி எச்சரிக்கை செய்ததாகக் கேள்வி.

ஃ

திருமதி கே. சிவமணி, உரும்பிராய்

கே: தமக்கு நிச்சயமாகத் தோல்வி ஏற்படும் என்று தெரிந்தும் தாமும் தேர்தலில் போட்டியிடுவதாக விளம்பரப்படுத்தும் சுயேச்சைப் பிரகிருதிகளின் அந்தரங்கம் என்னவோ, குயுக்தியாரே?

ப: அவர்கள் பிரகிருதிகள் அல்லர், அம்மணி! பெரிய டிஸைனர்கள் அவர்கள்! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் அடிக்கத் திட்டம் போடும் எத்தர்கள் அவர்கள்! கழுத்தை நெரிக்கும் பண நெருக்கடியால திண்டாடும் சிலர்தான் தேர்தல் காலத்தில் இந்தக் குறுக்கு வழியில் குதித்து பணம் திரட்டப் பார்க்கிறார்கள். கூடப் போட்டியிடுபவர்கள் யாராவது வந்து 5000 அல்லது 10000 கொடுத்து தடுத்து நிறுத்தினால் கிடைத்தது ஆதாயம்தானே என்பது அவர்கள் சூழ்ச்சி!

ஃ

பொ. சிவஞானம், யாழ்ப்பாணம்

கே: இங்கிலாந்தில் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொம்யூனிஸ்டுகள் எத்தனை ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள்?

ப: பதினெட்டு ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டார்கள். பதினெட்டு ஸ்தானங்களையும் கோட்டை விட்டார்கள். பதினேழு ஸ்தானங்களில் டிபாஸிட்டும் பறந்து விட்டது கொள்கை வளருது கோபுரம் போலே!

ஃ

கே. ஜே. தாஸ், கொழும்பு

கே: 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணனிடமிருந்து சுதந்திரனும் ஒரு தொடர் கதை வாங்கிப் பிரசுரித்தால் என்ன?

ப: ஒருவர் 'தென்றல்' ஆசிரியர் திரு கண்ணதாசனிடம், "ஆனந்தவிகடன் இதழில் 'மணி மொழி நீ என்னை மறந்துவிடு' என்றொரு தொடர் கதை வந்ததே, படித்தீர்களா?' என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்
த. பெ. 1183
கொழும்பு.—12

அதற்கு திரு கண்ணதாசன் கொடுத்திருக்கும் பதில் பின் வருமாறு: "நான் படிக்கவில்லை. கொத்தமங்கலம் சுப்புவை (ஆனந்தவிகடன் ஆசிரியர்) கேட்டேன். அந்தக் கதை வந்தவுடன் 20,000 வாசகர்கள் ஆனந்த விகடன் படிப்பதையே மறந்துவிட்டார்களாம். முடிந்தால் போதும் என்றாகிவிட்டதாம் சுப்பு மிகவும் வருத்தப்பட்டார்". இந்த நிலையில் சுதந்திரன் ஆசிரியரும் வருத்தப்பட வேண்டும் என்று நீர் கருதுகிறீரா?

ஃ

எஸ். சரவணமுத்து, கொழும்பு

கே: கோப்பாய்த் தொகுதியில் திருவாட்டி கோமதி வன்னியசிங்கத்தை எதிர்த்துப் போட்டியிடப்போவதாகப் பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடும் ஒருவர் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஐக்கிய பாவத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தும் பரந்த நோக்கத்துக்காகவே தாம் போட்டியிடுவதாகக் கூறிக் கொள்கிறாரே, இது சரியா?

ப: தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஐக்கியபாவத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் அவ்வளவு பரந்த நோக்கத்துடன் பலத்த அடிப்படையில் போட்டியிடும் அந்தப் பேர்வழி எதற்காகப் போயும் போயும் கோப்பாய்த் தொகுதிக்குப் போக வேண்டும்? அத்தனகலைத் தொகுதியில் போட்டியிடலாமே! அங்கு அவர் தலையைக் காட்டுவாரானால் நொமினேஷனுக்கு மறுநாள் ஒரு முண்டத்தைத்தான் விட்டுவைப்பார்கள் பரந்த நோக்கமுடைய அத்தனகலைப் பெருங்குடி மக்கள்!

ஃ

மு. செல்லமாணிக்கம், மண்டூர்.

கே: பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு யாழ்ப்பாணம், திருகோணமலை, இரத்தினபுரி போன்ற இடங்களிலெல்லாம் தமிழ் மக்கள் விழா நடத்துகிறார்களே. நமது புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளைக்கு விழா நடத்த சேகரித்த நிதி என்ன ஆயிற்று?

ப: நிதியா? அது எங்கேயிருக்கிறது? அதுதான் ஹோட்டல்களில் எல்லாம் விழா நடத்தி, வயிறு முட்ட ஊராச்சு, ஏப்பமும் விட்டாயிற்றே! யாழ்ப்பாணத்தார் செய்யும் காரியங்களை அப்படியே மட்டக்களப்பார் பின்பற்றக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்துக்காக இந்த விழாவுக்கு "ஹோல்டோன்" போட்டுவிட்டார் எட்டப்பர் என்று கேள்வி.

ஃ

இ. வள்ளியம்மை, கல்லடி உப்போடை

கே: இக்கால இளம் பெண்கள் கூந்தலிலே குஞ்சம் கட்டுவது எதற்காக?

ப: தம்மைக் கட்டிக்கொள்ளப்போகும் ஏமாளியின் நெஞ்சத்தை எப்படித் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடலாம் என்பதைக் கொஞ்சம் பயின்றுகொள்வதற்காக.

ஃ

லீலா கணேந்திரன், வத்தளை

கே: நீங்கள் வாசனைச் செண்டுகளை உபயோகிப்பதுண்டா?

ப: தினமும் குளித்து சுத்தமாக ஆடை தரிக்கும் ஒருவருக்கு செயற்கை வாசனைச் செண்டு எதற்கு?

ஃ

மு. காசித்தம்பி, கற்கோவளம்

கே: ஒரு பெண் அழகாகச் சிங்காரித்துச் சென்றால் மக்கள் என்ன சொல்லுவார்கள்?

ப: பண்பட்ட மக்கள், 'அடடா இவள் ஒரு அழகுச் சிங்காரியாக இருக்கிறாளே' என்று சொல்லுவார்கள். பண்படாதவர்களாயிருந்தால் பலதையும் பேசிக்கொள்வார்கள்.

ஃ

வி. சுப்பையா, கல்கெதர

கே: உலகில் பெண்களே இல்லாவிட்டால்.........?

ப: மிக நல்லதாய்ப் போயிற்றே. ஆண்களும் இருக்க மாட்டார்கள் அல்லவா?

# ஒளித் திருநாள்

— நீலாவணன் —

வானத்தின் தாரையெலாம் 'வந்ததுதீ
பாவளி—நாம் வாழோம்' என்றே
போனதுவும் தெரியாதோ? புவியெலாம்
ஒளிவெள்ளம் பொங்கி நிற்க,
சீனத்து வெடியுண்ட செருக்கினிலே
செந்தீயும் சிரித்தல் கேளா(து)?
ஏனத்தான் இன்றேனும் இளங்காலை
நேரத்தில் எழுந்தால் என்ன?

●

ஆள் அரவம் அற்றதொரு அறையினிலே
அதிகாலை அந்நேரத்தில்
யாழ் அரவம் கேட்டெழுந்து யாரென்றேன்
என் மனையாள் 'நானதான்' என்றே
பாழை வெடித் ததுவென்னப் பல்வரிசை
காட்டிப்பின் பறந்து சென்றுள்
சாளரத்தின் கதவுகளைத் திறந்திடலும்
ஒளிக்கதிர்கள் சார்ந்த தங்கே

●

வாழ்வாரைப் பார்த்துமனம் வதைவார்
அல்லிமலர் வதனம் வாட [போல்
தாழ்வுகண்டும் கலங்காத தன்மானத்
தமிழன்போல் தாமரைப் பெண்
கிழ் வானம் சிவக்கின்ற கிளுகிளுப்பில்
மெய்மறந்து கிறங்கி நிற்ப
ஆழ்கடலின் மீதொருவன் அழகாகத்
தவழ்கின்றான்; அருணன்! ஆமாம்!!

●

நேற்றெல்லாம் அடுப்படியில் நெய்யெல்லாம்
செலவழித்து நினைக்க நாவில்
ஊற்றெடுத்துப் பெருகவைத்தான் உமிழ்
ஒன்றேனும் ஈந்தா வில்லை! [நீரை
பாற்சோறா, பலகாரம் பண்ணிவைத்தாள்
இன்றேனும் படைப்பா ளென்று
'ஆற்றுக்குப் போகஎண்ணெய் ஆயத்த
மோ?' என்றேன் 'ஆமாம்'; என்றாள்.

●

சுருங்கிவிட்ட தோல்ஒழியச் சொல் சுருங்க
வில்லை, எமைச் சுட்டி ஆற்றில்
பெருங்கிழங்கள் இரண்டொருவர் பேத்தி
பேரழகுப் பேழை என்றே [யார்
கருங்காலிக் கட்டழகன் தனக் கோஇக்
கடைந்தெடுத்த முதிரை? என்பார்
பெருங்கோபம் மூண்டாலும் பேசவொண்ணு
"தீவாளி" பிறகு பார்ப்போம்!

நீராடிக் கலைந்த இவள் நெடுங் கூந்தல்
வழியெல்லாம் நெருஞ்சி யோடு
போராடிக் கொய்துவரும் பொன்மலர்கள்
போதாதெம் பூசைக் கென்று
ஆராத காதலொடும் ஆதவன்றன்
அணைப்பினின்ற அம்புயங்கள்
வேரோடும் பறித்தெடுத்து வீடுவந்தோம்
விழா அமைக்க வேண்டா யாநாம்?

●

முத்திடித்த மாவெடுத்தாள் முற்றமெலாம்
கோலமிட்டாள், முடித்தாள்; வண்ணக்
குத்துவிளக் கேற்றிநிறை கும்பமொடு
கொய்தமலர் குவித்து வைத்தாள்
முத்தமிழின் நினைவோதான்? மூன்று
அடுப்பாக மூட்டி அங்கு [கல்லை
வைத்தனள்தீ அதில்வகுப்பு வாதஇருள்
அரக்கனுயிர் வதைக என்றோ?

●

செந்நெல்லின் மணிஅரிசைச் செழும்
இட்டதற்குச் சீனி யோடு [பாலில்
கன்னல்நறுங் கனிவகையும் கற்கண்டுப்
பாகுடனே கலந்து ஊற்றி
உண்ண உண்ணத் தெவிட்டாத ஒளித்
[திருநாள்ப்
பொங்கலிட்டோம் உணர்ச்சிப் பொங்கல்
தின்னுதற்கா ஆளில்லை? திரும்பிப் பார்
காக்கையண்ணார் திருக்கூட்டத்தை!

●

நரகனவன் காலத்தே நாமெல்லாம்
இருளாகி நாடிழல் வாழ்ந்தோம்
அரக்கனவன் இறந்தபின்பு அடடாநாம்
காக்கையினம் ஆனோ மென்று
உருக்கமுடன் உரைசெய்த காக்கைகளுக்
குணவிட்டாம்; உண்டோம் ஒன்றும்
இரக்கமுள்ள காக்கையினம் இனியதமிழ்
பாடி எமை ஏத்திற் றம்மா!

●

செந்தூரப் பொட்டோடும் சீனத்தின்
பட்டோடும் சிலம்பு கொஞ்ச
எந்தனில்லாள் ஏந்திவந்தாள் இனிதான
பண்டங்கள் இருந்த தட்டை
எந்தனுக்கோ வயிற்றில்இடம் 'இல்லை'த்தான்
கடுகளவும்! என்று ஒழிந்தான்
இத் தத்தி பாவனிதான் என்னுளும்
வந்திடுமோ இழுக்கச் செய்போமே!

# நமக்குத் தொழில் கவிதை



நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

## போட்டி இல : 10

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு "சிரித்தாளே அந்தச் சிலை" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

— ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183,
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி 10—11—59

"சிரித்தாளே அந்தச் சிலை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழ் நாட்டிலுந் தமிழியக்கம் மிகச் சிறப்பாகப் பல துறைகளில் முன்னேறுகிறது. 'ஸ்ரீ' 'ஸ்ரீமதி' என்ற வட சொற்களைவிட்டுவிட்டுத் 'திரு', 'திருமதி' என்ற சொற்களை ஆளல் வேண்டும் என்று சென்னை மாநகராட்சி மன்றமும் அதனைப் பின்பற்றிப் பல உள்ளூராட்சி மன்றங்களும் திர்மானங்களை நிறைவேற்றிச் செயற்படுத்துகின்றன. 'திருமதி'யில் வடமொழி வாடையடிப்பதால் 'திருவாட்டி'யை ஆளுதல் வேண்டும் என திருவண்ணாமலை நகராட்சி மன்றம் முடிவு செய்துளது. தமிழிலேயே கோவில்களில் அருச்சனை செய்தல் வேண்டும் எனவும் தமிழ் நாட்டில் கிளர்ச்சி நடைபெறுகிறது. தமிழிலேயே அர்ச்சனையைச் செய்க எனத் தமிழ்ப்புலவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்துளர்.

## தமிழில் முகவரி

'எல்லாந் தமிழில்' எனும் இயக்கம் தமிழர் தொகையாக வாழும் இடமெங்கும் பரவத் தொடங்கியுளது. தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் யாவரும் இன்னும் தாம் நாடோறும் செய்யுங் கருமங்கள் யாவற்றிலும் தமிழுக்கு முதன்மை கொடுக்கவில்லை. தமிழார்வம்-தனித் தமிழ்ப் பற்று-மிக்க பலர் அங்குளர். அவர்கள் யாவரையும் வடமொழியை மட்டுமன்றி ஆங்கிலத்தையும் விடுத்துத் தமிழுக்கு வாழ்வின் துறையனைத்திலும் முதன்மை கொடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ் நாட்டிலிருந்து இலங்கையிலுள்ள தமிழருக்கு அனுப்பப்படும் பத்திரிகைகள், நூல்கள் முதலியவற்றுக்கு ஆங்கிலத்திலே முகவரி எழுதப்படுகிறதெனத் தமிழியக்கத் தொண்டர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தக் குறையை நீக்குமாறு தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளின் உரிமையாளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். முகவரிகளை எல்லாம் தமிழிலே எழுதுவதால் எவ்வித இடரும் உண்டாகாது என்று அவர்களுக்கு அறிவிக்கவிரும்புகிறோம்.

## தமிழுக்கு முதன்மை

அறிவுக்காக வடமொழியையோ ஆங்கிலத்தையோ பிற மொழிகளையோ கற்க வேண்டாம் என்பது எங்கள் கருத்தன்று. தாய்மொழியான தமிழிலே செய்யத்தக்கவற்றை எல்லாந் தமிழிலேயே செய்தல் வேண்டும் என்பதும், தாய்மொழி முதன்மை பெற வேண்டிய துறைகளில் வடமொழியும் ஆங்கிலமும் தெலுங்கும் முதன்மை பெற்றுவிட்டனவாகையால் அவற்றை ஒழித்து அத்துறைகளில் தமிழ் மொழிக்கு முதன்மை கொடுத்தல் வேண்டும் என்பதுமே எமது இயக்கத்தின் கொள்கையாகும்.

"தமிழ் மொழி தமிழர் வாழ்வின் துறையனைத்திலும் தானிழந்த முதன்மையைப் பெறும்வரையும் தமிழறிஞர்களும் தமிழ்ப் பெரியார்களும் தாங்கள் மேடைகளிலே பேசும்பொழுது 'எல்லாந் தமிழில்' எனும் இயக்கத்தைப் பற்றியும் ஒரு நிமிட நேரம் பேசுதலைத் தம் கடனாகக் கொள்ளுதல் வேண்டும்" எனத் தொண்டர் ஒருவர் கூறுகிறார். இந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தித் தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றுமாறு தமிழறிஞர்களையும் தமிழ்ப் பெரியார்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## தமிழியக்க வாரம்

தமிழியக்க வாரத்தைக் கார்த்திகைத் திங்களிற் கொண்டாடுதற்கு ஒழுங்கு செய்தோம். அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருக்கும்வரையும் ஊர்வலம் முதலியவற்றுடன் சிறப்பாகக் கொண்டாட முடியாதாகையால் தமிழியக்க வாரக் கொண்டாட்டத்தைப் பின்போடல் இன்றியமையாததாகிறது. அரசாங்கம் அவசரகாலச் சட்ட விதிப்பை ஒழித்தவுடன் தமிழியக்க வாரங் கொண்டாடுங்காலத்தைப் பற்றி முடிவு செய்வோம்.

## உழைப்பு வேண்டும்

எந்த இயக்கமும் பரந்து நிலைத்துப் பயனளித்தற்கு உணர்ச்சிமிக்க தொண்டர்கள் பலர் சலியாது உழைத்தல் வேண்டும். விழிப்பும், புத்துணர்ச்சியும் கடமைப் பற்றுங் கொண்ட இனத்தவரிடையே பொது இயக்கங்கள் விரைவிலே பரவும். எமது தமிழினத்தவரிடையே போதிய விழிப்புணர்ச்சி இன்னுந் தோன்றவில்லை. இதனாலே தமிழியக்கத் தொண்டர்கள் இடைவிடாது உழைக்க வேண்டியவராயிருக்கின்றனர். எந்த நல்ல உழைப்பும் வீண்போகாது. "மெய்வருத்தக் கூலி தரும்" என்பது வள்ளுவர் வாய்மொழி. எனவே தமிழியக்கத் தொண்டர்கள் தமிழ் மக்கள் சிலருடைய உணர்ச்சியில்லாத போக்கைக் கண்டு மனந் தளராமல் உழைத்தல் வேண்டும்.

## உணர்ச்சி வேண்டும்

பிரித்தானியாவிலே பத்திரிகைகள் மூலம்வாக்கெடுப்பு நடத்திப் பல காரியங்களைச் சாதிக்கின்றனர். நம் நாட்டிலே இவ்வாறு செய்தற்கு மக்கள் பயிற்றப்பட்டிலர். அன்றியும் பொதுப் பணிகளில் ஒவ்வொருவரும் இயன்ற அளவுக்கு ஈடுபடல் வேண்டும் எனுங் கருத்தும் நம் இனத்தவர் பலரிடையே இல்லை. இதனால் பொதுப் பணிகளில் ஈடுபடுஞ் சிலர் மட்டுமே அளவு கடந்து உழைக்கவேண்டியிருக்கிறது. இனத்துக்கு நெருக்கடி உண்டான காலத்தில் இவர்களுஞ் சோர்ந்து இருந்தால் இனம் பல இன்னல்களை அடையும். உணர்ச்சியற்ற பலர் சுயநலமும் அடிமை மனப்பான்மையும், அறிவின்மையுங் காரணமாகத் தமக்கு, தமது மொழிக்கு, தமது இனத்துக்கு நன்மையான செயல்களில் ஈடுபடாதிருப்பினும் உணர்ச்சியுள்ள சிலர் தம் கடமையைச் செய்யப் பின்னிற்கப்படாது. உணர்ச்சியற்றவர்களுக்கு உணர்ச்சியூட்டும் முயற்சியைக் கைவிடல் கூடாது.

## திருப்பித் திருப்பிக் கூறல்

"உண்மையை உணராதவர்களுக்கு மீண்டும் மீண்டும் அதனை எடுத்து உரைப்பதில் எவ்வித குறையுமில்லையே" இதுதான் வெற்றிக்கு வழி. "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்பது தமிழ்மறை. ஆகையால் நம் மக்கள் தமிழியக்கத்தில் ஈடுபடும்வரையும் நாம் தமிழியக்கத்தின் இன்றியமையாமையை எடுத்துக்கூறிக் கொண்டும் நமது கடமையைச் செய்துகொண்டுமே யிருத்தல் வேண்டும்.

## தொண்டர் சேர்வு

தமிழியக்கத் தொண்டர்கள் பிரசாரம் செய்வதுடன் மட்டுமின்றித் தொண்டர்கள் பலரைச் சேர்க்கும் பணியிலும் முனைந்து நிற்றல் வேண்டும். ஒவ்வொரு தொண்டரும் பத்துப் பேரைச் சேர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளைச் சில தொண்டர்கள் பொருட்படுத்தி முயன்றுளர். எல்லாத் தொண்டர்களும் கார்த்திகைத் திங்கள் முடிவதற்கு முன் தொண்டர்கள் பலரைச் சேர்த்தல் வேண்டும். பத்துக்கு மேற்பட்ட தொண்டர்களைச் சேர்த்தோரின் பெயர்களையும் அவர்கள் சேர்த்த தொண்டர்களின் பட்டியலையும் விரைவில் வெளியிடுவோம்.

இதனை வாசிக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழ்த் தாயின் பெயரால் விடுக்கிறோம் ஒரு வேண்டுகோள்: "தமிழியக்கத் தொண்டராக இன்னும் சேராவிட்டால் உடனே சேர்க. இதனை உம்முடைய நண்பர்களையும் வாசிக்கச் செய்க."!

தொண்டர்களாகச் சேருதற்குச் செய்யவேண்டியது உங்கள் பெயர், வயது, முகவரி, தொழில் என்பவற்றை எழுதிக் கையெழுத்திட்டு, தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புதலே.

கல்லூரிகளிலே கற்கும் மாணவர்களிடையே தமிழியக்கத்தைப் பரப்புதற்காகப் பரிசிற்றிட்டம் ஒன்றினை வகுத்துளோம். தமிழ்க் கல்வி நிலையங்கள் யாவும் இதிற் பங்குபற்றும் என்று எண்ணுகிறோம். முடிவுதேதி 1-12-59 என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

## தமிழியக்கத் தொண்டர்கள்

157. மு. இராசரத்தினம், பத்தமேனி. 158. பி. யோசப், செங்கலடி. 159. பொன்னு குலசிங்கம், டிக்கோயா. 160. மனோரஞ்சிதம் நமசிவாயம், வவுனியா.

161. நா. குமாரமூர்த்தி, செட்டிகுளம். 162. மு. சி. க. வேலாயுதம், இலுப்பந்துறை. 163. எச். எம். சதக்கத்துல்லா, சிலாபம். 164. வே. சின்னத்துரை, வவுனியா. 165. க. இளையதம்பி, கொழும்பு 12. 166. கு. செல்வநாயகம், கரவெட்டி. 167. க. இரத்தினசபாபதி, கண்டிக்குளி. 168. ந. ஆனந்தராசா, சித்தங்கேணி. 169. க. ஏகாம்பரம், கல்கமுவ. 170. மூ. சி. நாகரத்தினம், மல்வத்தோயா.

171. த. பேரம்பலம், வதுளை. 172. அ. க. சின்னையா, வதுளை. 173. க. இரத்தினம், வதுளை. 174. துரைராசா, வல்வெட்டித்துறை. 175. ஆ. சுப்பிரமணியம், வல்வெட்டித்துறை. 176. சி. துரைராசா, வல்வெட்டித்துறை. 177. க. குணரத்தினம், வல்வெட்டித்துறை. 178. மு. இராசையா, வல்வெட்டித்துறை. 179. ச. கந்தசாமி, வல்வெட்டித்துறை. 180. சி. செல்லமாணிக்கம், வல்வெட்டித்துறை.


தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை !
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்ரோட், புறக்கோட்டை
கொழும்பு


## மாணவர் சேர்வு-படிவம்

1. கல்லூரியின் பெயர்..............................
2: தமிழ் மன்றத்தின் பெயர்..............................
3. மாணவர் முழுப் பெயர்..............................
4. வகுப்பு..............................வயது..............................

சொந்த ஊர்..............................

நான் என்னுடைய கருமங்கள் யாவற்றையும் தமிழிலேயே செய்வேன் எனவும் என்னுடைய ஆசிரியரையும் சுற்றத்தாரையும் நண்பர்களையும் தமிழிலேயே அவர்களுடைய கருமங்களைச் செய்யுமாறு தூண்டுவேன் எனவும் உறுதிகூறுகிறேன். என்னைத் தமிழியக்கத் தொண்டராகச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

..............................
தமிழ் மன்றச் செயலாளர் கையொப்பம்

..............................
மாணவர் கையொப்பம்


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்




பாவிக்க ஆரம்பித்து
அதிக லாபம் பெற்று
ஆனந்தியுங்கள்.
நெடியகாலம் பாவிக்கிறது



விலையோ
மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:
எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,
70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, கொல்.போன்:525.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுவுடன் நேசம் பாரதத்துக்கு நாசம்

## சமாதான சக வாழ்வுப் பேச்சுக்கு இனி இடமில்லை

## நாட்டுப் பாதுகாப்புக்கு கண்டிப்பான நடவடிக்கை எடுத்தாக வேண்டும்

### பிரபல பத்திரிகைகள் வற்புறுத்து

சென்னை அக். 28—

பாரதப் பிரதமர் நேருவுக்கு இப்போது உள்ளதுபோன்ற சோதனைக் காலம் முன் எப்பொழுதும் இருந்ததில்லை என்று சொல்லலாம். உள்நாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் எப்பொழுதும் அவருக்கு எதிர்ப்பு இருந்து வந்தது தெரிந்ததே. ஆனால் வெளிநாட்டுக் கொள்கையளவில் பாரதப் பிரதமர் கொண்டிருந்த கருத்துகளுக்கும் எடுத்து வந்த நடவடிக்கைகளுக்கும் இற்றைவரை எதிர்ப்போ மறுப்போ எந்தக் கோணத்திலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் கிளம்பியது கிடையாது.

#### பஞ்ச சீலம்

பஞ்ச சீலம் என்று சொல்லப்படும் நல்லுறவுச் சமாதான சகவாழ்வு நாடுகளுக்கிடையே நிலவ வேண்டும் என்று பிரதமர் நேரு விரும்புவதை இதுவரை பொதுவாக எல்லா ஆசிய நாடுகளும் வரவேற்கச் செய்தன. தம்மாலான அளவு அந்த இலட்சியத்துக்காக பிரதமர் நேருவுடன் ஒத்துழைக்கவும் அவை தயங்கவில்லை. ஆகவே நிலைமை சுமுகமாக இருந்ததைப் பார்த்ததும் எல்லோரும் நேருவுக்குப் புகழ்மாலை சூட்டி வந்தார்கள்.

#### நேருமீது பழி

ஆனால் இன்று...? நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. புகழ்ந்தவர்கள் எல்லோரும் மறுபக்கம் பாடுகிறார்கள், பழிசுமத்துகிறார்கள். "நாட்டைக் காப்பாற்று அதற்கு கொள்கையை மாற்று" என்கிறார்கள். "பஞ்ச சீலம் என்பது அந்த நாடும் அதில் நம்பிக்கை வைத்திருக்கும் வரைதான் நலம் தரும். ஒருதலைப் பஞ்ச சீலம் அதைப் பேணும் நாட்டை உருப்படவிடாது" என்று குரல் எழுப்பி வருகிறார்கள்.

#### ஆரம்பச் சரித்திரம்

இந்தக் குரல் முதன்முதலாக எழுந்தது கடந்த ஆகஸ்ட் மாதத்திலாகும். அப்போதுதான் சீனு இந்திய எல்லை மீது கைபோடத் தொடங்கியது. இந்திய-சீன எல்லைப் பிரதேசத்தில் தகராறு முளைத்தது. இந்திய எல்லைப் பிரதேசத்தில் சீனு பல மைல் விஸ்தீரணமுள்ள பிராந்தியத்தைத் தன் வசமாக்கிக்கொண்டது என்று இந்தியா புகார் கூறியது. சீனு அதை மறுத்தது. அறிக்கைகள் அங்கும் இங்கும் பறந்துகொண்டிருந்தன. சிலகாலம் நெருக்கடி நிலைமை நிலவியது. பின்னர் எப்படியோ தணிந்தது. அத்தோடு எல்லாம் சரியாகிவிடும் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

#### மீண்டும் தகராறு

ஆனால் நினைத்தமாதிரி நடக்கவில்லை. சீனு மீண்டும் எல்லைப் பிரதேசத்தில் அணிமையில் வாலாட்டத் தொடங்கிவிட்டது. பத்து இந்தியர்களை அது சிறைப்படுத்தியுள்ளதாகவும் இன்னும் ஒன்பது பேரைச் சுட்டுத் தள்ளிக் குழியிலே போட்டுப் புதைத்துவிட்டதாகவும் செய்திகள் வந்தன. இதுபற்றியும் இரு நாடுகளுக்கிடையேயும் அறிக்கைப் பரிமாறல் நடந்து வருகிறது.

#### பேச்சுவார்த்தைகள்

சீனு தான் குற்றவாளி இல்லை என்கிறது இந்தியா சீனுதான் குற்றவாளி என்று நேரடியாகச் சொல்லுகிறது.

**சென்னைக்கடிதம்**

சுதந்திரன் சென்னை நிருபர் ஈழத்தரசன்

இப்படியே சம்பவம் நடப்பதும் பின்னர் யார் குற்றவாளி என்று கண்டுபிடிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடப்பதும் தொடருமானால் நிலைமை என்ன ஆகும்?

மீண்டும் மீண்டும் பாரதம் தாக்குதலுக்கு ஆளாகவேண்டியதுதானா?—இதைத்தான்



பிரதமர் நேரு

எல்லோரும் கேட்கிறார்கள். இந்தியப் பத்திரிகைகள் பிரதமர் நேருவை உறைப்பாக கேட்கின்றன.

#### எக்ஸ்பிரஸ் பத்திரிகை

"சீனக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிகொள்ள விரும்புவது லடாக்கும், நேபாளமும், பூடானும், சிக்கிமும் மட்டுமல்ல, இந்தியா முழுவதையும் தமது ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென்பதே செஞ்சீனர்களின் குறிக்கோள் என்பதையும் அதற்கென்றே அவர்கள் திட்டமிட்டு வேலை செய்கின்றனர் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

"சீனர்களின் புதிய ஆக்கிரமிப்புக்கள் ஒவ்வொன்றையும் பிரதமர் நேரு தமது வார்த்தை வெள்ளத்தால் மூடி மெழுக முயற்சிப்பதானது இந்திய மக்களுக்கு துக்கத்தையும் சீனர்களுக்கு மேலும் தைரியத்தையுமளிப்பதாகவே இருக்கிறது" என்று கூறுகிறது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை.

#### டைம்ஸ் ஒவ் இந்தியா

"நேருவின் வெளிவிவகாரக் கொள்கையை ஆதரிப்பவருங்கூட, சீனு கடைசியாக இழைத்துள்ள கொடுமையைக் கண்டு, நேருவின் கொள்கை சரியானதல்லவென்றே அவரைக் கண்டிப்பர். வெட்டுக்கிளி வேட்டைக்கு ... மென்று அசட்... எம்மை ஏளனம் செய்வது போன்ற சாக்குக் கூறும் சீனர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய ஒரே நியாயமான நடவடிக்கை இராணுவ அரசியல் ரீதியிலானதேயாகும்" என்று கூறுகிறது டைம்ஸ் ஒவ் இந்தியா.

அது மேலும் கூறுவதாவது:-

#### நட்பும் நல்லெண்ணமும் பயன் தரா

"சீக்கிங் இந்தியாவுக்கு ஆத்திரமும் அவமானமும் உண்டுபண்ணும் காரியங்களைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பின் இந்தியா சீனுவுடன் உள்ள ராஜதந்திரத் தொடர்புகளை துண்டித்துக் கொள்வதுபோன்ற நடவடிக்கையை மேற்கொள்வதுபற்றி ஆலோசிக்க வேண்டியது அவசியம். இத்தகைய நடவடிக்கைமூலமே சீனுவுக்கு நல்ல பாடம் கற்பிக்கலாம். நட்பு நல்லெண்ணம் என்பதெல்லாம் இனிப் பயன்படாது"

#### ஹிந்துஸ்தான் டைம்ஸ்

"நமது வெளிநாட்டுக் கொள்கையை இந்தியாவின் பாதுகாப்பை ஆதாரமாகக் கொண்டு வகுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. பீக்கிங்கோ அல்லது வேறு எவருமோ அதனை எவ்வாறு கருதுவர் என்பதுபற்றி எமக்குக் கவலையில்லை. இரு நாடுகளுக்குமிடையே இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலையில், நட்பு சமாதானம் என்பன பற்றிப் பேசுவது அர்த்தமற்றது. நட்பையும் சமாதானத்தையும் விட நமது பாதுகாப்புக்கே நாம் முக்கியத்துவமளிக்கிறோம் என்பதை சீனு உணரும்படி செய்ய வேண்டுமென்பதையே நாம் விரும்புகிறோம்"—என்கிறது ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற பத்திரிகை. மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது:-

#### பேச்சுவார்த்தையால் பிரச்னை தீராது

"நமது பொறுமை சீனரின் அகந்தையை அதிகரிக்கக் கூடும். நமது தேசப் பாதுகாப்புக்கு உண்மையில் ஆபத்து தோன்றக்கூடிய அளவுக்கு சீனர்கள் மீண்டும் பலாத்காரத்தில் இறங்கவும் அது அவர்களைத் தூண்டக் கூடும்.

"நமது தன்மானத்தைப் பாதுகாக்கவும் உலக சமாதானத்தின் நலனுக்காகவும் இச்சந்தர்ப்பத்தில் இந்தியா ஓரளவுக்காவது பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

"சமரசப் பேச்சுவார்த்தைகள்மூலம் எல்லைத் தகராறைத் தீர்த்துக்கொள்ளலாமென்று இதுவரை கொண்டிருந்த நம்பிக்கையையும் நேரு இப்போது ... தான்"—இப்படிக் கூறுகிறது ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை.

#### தலைலாமா பரிவாரம்

பத்திரிகைக் கருத்துக்களுக்கு புறம்பான ஒரு கருத்தை பொதுமக்கள் வெளியிட்டு வருகிறார்கள். சீனு ஏன் இந்தியாமீது கை வைக்கிறது என்பதற்கு பதிலாக அமைகிறது அவர்களுடைய கருத்து.

தலைலாமா பரிவாரத்தை இந்தியாவிலிருந்து அப்புறப்படுத்திவிட்டால் தொல்லை எதுவும் இருக்காது என்கிறார்கள். இது நடைபெறுகிற வரை சீனுவின் பகையை எப்பொழுதும் இந்தியா கட்டிக் கொண்டிருக்க வேண்டியதுதான் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.


# அன்பர்களே!

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**
**( Spermatone Compound )**

**ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்** மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்தி வாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் போட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

**'மோடர்ன் கிலினிக்'**
**(MODERN CLINIC)**
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்



# மௌலானு
## அச்சடித்த சீத்தைகள்



**ரமணீகரமாக காட்சியளிக்க**
**இன்றே தெரிவு செய்யுங்கள்**

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்
★ சாயம் மங்காதவை
★ நீடிய உழைப்பு
★ தரத்தில் உயர்வானது

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

**மௌலானு (சிலோன்) லிமிட்.,**
கொழும்பு, மருதானை, கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பில் துவங்கி அருளில் முடியும் வாழ்வுநெறி

## தமிழன் கண்ட அறநெறி

## இதுதான் சைவ நெறி-சிவநெறி-தமிழ் நெறி

## இளைஞர்களின் கேள்விகளுக்கு பதிலிறுக்க முடியாதவர்கள் சமயபோதனைக்கு ஏற்றவரல்ல

## "நான் சொல்லுகிறேன்-நீ நம்பு" என்ற பழைய வழிமுறை இன்று பயன்தருவதில்லை

## இந்து வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேச்சு

"அன்பில் தொடங்கி அருளில் முடியும் வாழ்வு நெறிதான் தமிழன் கண்ட அற நெறி. இதுதான் சைவநெறி-சிவநெறி-தமிழ் நெறி. அன்பும் சிவமும் ஒன்று. தமிழும் சிவமும் ஒன்று. எனவே அன்புக்கும் அருளுக்கும் மாறுபட்டவைகளையெல்லாம் சைவம் என்று போற்றும் மடமை ஒழிதல் வேண்டும்"—இவ்வாறு பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்து வாலிபர் சங்கம் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் நடத்திய கூட்டத்தில் "இறைவற்கொரு பச்சிலை" என்ற பொருள் பற்றிப் பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் பேசினார்.

### தலைமையுரை

திரு எஸ். சிவசிதம்பரம் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். அவர் தமது தலைமை உரையில், வாலிபர்கள் சமயப்பற்றுக்கொண்டு நெறியான வாழ்க்கை நடத்த வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். சமய அறிவற்ற இளைஞர்கள் நிலை பரிதாபத்துக்கு உரியது என்றும் அவர் சொன்னார்.

பண்டிதர் திரு இரத்தினம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

### சைவமும் தமிழும்

"சிவநெறிக்குத்தமிழோடு உள்ள தொடர்பு பண்டு தொட்டு உண்டானது. இடையில் உண்டான தொடர்புகளால் பழந்தொடர்பு பாதிக்கப்பட்ட காலங்களில் தமிழ்ப் பெருமக்கள் பலர் தோன்றிப் பழந்தொடர்பை நிலைநாட்டியுளர், ஆயினும் சிலர் இடைவிடாது செய்த முயற்சியினால் சைவ சமயத்துறையில் தமிழ் தன் முதன்மையையிழந்துவிட்டது உணர்ச்சியுள்ள தமிழர்கள் சைவ சமய வழிபாடுகள் யாவும் தமிழிலேதான் நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தத்தொடங்கி யுள்ளார்கள். வெற்றி விரைவில் கிடைக்கும்."

### இந்து சமயமும் சைவமும்

பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில், சைவ சமயம் பழம் பெரும் சமயம் என்றும் அதை இந்து சமயத்துள் அடக்கிப் பேசுவது மடமை என்றும், சைவம், நாவலர்காலம்வரை தனித்து வாழ்ந்தது என்றும் பின்னர் அது இந்து சமயத்துள் அடக்கப்பட்டதால் தமிழின் சிறப்பும், தமிழரின் பண்பும், சைவத்தின் பழமையும் உயர்வும் மங்கிவிட்டன என்று சொன்னார்.

### சைவத் தொண்டு

சைவத்தை வளர்ப்பதற்கு இலங்கையில் உள்ள மூன்று வகையான நிலையங்கள், முறையே கோயில்கள், கல்வி நிலையங்கள், சைவசமய சங்கங்கள் ஒன்றுபட்டுத் தொண்டு செய்திருந்தால் சைவம் தான் இழந்த பழம் பெருமையைப் பெற்றிருக்கும். அத்தோடு சைவத்தின் உயர் நிலைக்கு மாறான அநாகரிகச் செயலகள் சைவர்களிடையே எப்பொழுதோ ஒழிக்கப்பட்டிருக்கும் என்றார் திரு இரத்தினம்.

அவர் மேலும் சொன்னார்:

### சைவத்தை மாசுபடுத்தும் செயல்கள்

"சைவத்தின் பெயரால் சாதி வேற்றுமையைப்போற்றித் தீண்டாமை பாராட்டுதல், தெய்வத்தின் பெயரால் உயிர் பலி இடுதல், கையி[illegible] வாங்கி அருச்சனை செய்வித்தல், வாணவே[illegible] யாட்டு, சதுர்க்கச்சேரி போன்ற களியாட்டங்களைத் திருவிழாக்களுடன் நடத்தல் முதலியன சைவத்தை மாசுபடுத்துகின்றன. இவற்றை நீக்குதற்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் பிற் பகுதியிலே தானும் நம் சைவர்களும் சைவ நிலையங்களும் முற்படவில்லை. முற்படும் சிலருக்குப் போதிய ஆதரவுமில்லை. வயது வந்தவர்களிலும் வாலிபர்களே முற்போக்கு உடையவர்கள், உணர்ச்சியுடன் முயலத்தக்கவர்கள். ஆகவே இந்து வாலிபர் சங்கத்தினர் ஏனைய வாலிபர் சங்கங்களுடன் சேர்ந்து இந்தக் குறைகளை நீக்கிச் சைவ நீதியை உலகமெல்லாம் விளங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்"—இவ்வாறு பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் பேசி முடித்தார்.

கூட்டத்தில் திரு எஸ். டி. சிவநாயகமும் பேசினார். "இளைஞரும் சமய வாழ்வும்" என்ற பொருள் பற்றி அவர் பேசினார்

திரு எஸ். டி. சிவநாயகம் பேசியதாவது:

### தலைப்பும் அழைப்பும்

"'இளைஞரும் சமய வாழ்வும்' என்ற தலைப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆமாம், தரப்பட்டுத்தான் இருக்கிறது. நான் கேட்டுப் பெற்ற தலைப்பு அல்ல இது.

"இந்து வாலிபர் சங்கச் செயலாளரான திரு என். சோமகாந்தன் என்னுடைய நண்பர். என்னிடம் ஒருநாள் வந்து மேலே சொன்ன தலைப்பைக் கூறி அதுபற்றி நான் பேச வேண்டும் என்று கேட்டார். கூட்டம் எப்போது என்று கேட்டேன் நான். இன்ன நாளைக்கு என்று சொன்னவர் தொடர்ந்து இன்னுமொரு விஷயத்தையும் சொன்னார். அதாவது கூட்ட அறிவித்தல் பிரசுரங்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் அவற்றில் என் பெயரும் பேசத் தரப்பட்ட தலைப்பும் பொறிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் சொன்னார்.

"கேண்மை முறையில் என்னைக் கேட்காமலே செய்த வேலையின் பயனாக இன்று நான் பேச வேண்டியிருக்கிறது, 'இளைஞரும் சமய வாழ்வும்' என்ற பொருள்பற்றி.

### தரப்படுவது அறிஞர்கள் கருத்துக்கள்

"சமயத்தைப்பற்றித் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவிக்க எனக்குத் தகுதி இல்லை என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம். நான் சமய பண்டிதன் அல்லன். ஆயினும் சமயக் கருத்துக்களைப் பல நூல்களில் படித்து அறிந்திருக்கிறேன். அப்படியே பல அறிஞர்கள் சமயப் படியில் நின்று சாதகமாக எழுதியவற்றைப் படித்த அளவுக்கு வேறு பல அறிஞர் பெருமக்கள் சிறிது விலகி நின்று அறிவு வாதக் கண்ணோட்டத்தில் எழுதியவற்றையும் நிறையப் படித்திருக்கிறேன். இந்த இரண்டு கட்சிகளையும்—அதாவது அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களையே. உங்கள் முன் சமர்ப்பிக்கப்போகிறேன். ஆகவே என் பேச்சில் சொந்தக் கருத்துக்கு இடமில்லை. பிறர் சொன்னதை உங்கள் சிந்தனைக்குத் தருகிறேன்.

### இருவகை இளைஞர்கள்

"'இளைஞரும் சமய வாழ்வும்' என்ற தலைப்பிலே மூன்று அம்சங்கள் (1) இளைஞர் (2) சமயம் (3) வாழ்வு. யார் இளைஞர்? இந்தக் கேள்விக்கு முதலில் விடை கண்டாக வேண்டும்.

"இளைஞர் இருவகையினர். வயதால் இளைஞர்கள், ஆனால் உள்ளத்தால் கிழவர்கள் இருக்கிறார்களே, இவர்கள் ஒருவகையினர். மற்ற வகையினர் வயதால் கிழவர்கள், ஆனால் உள்ளத்தால் இளைஞர்கள்.

"இந்தியப் பிரதமர் நேருவுக்கு இப்போது வயதுஏறத்தாழ 70 ஆகிறது ஆயினும் அவர் சுறுசுறுப்பாக இருக்கிறார். எத்தனையோ காரியங்களைப் பார்க்கிறார் சோர்வு அவரிடம் தலைகாட்டுவதாக இல்லை. அதனால் அவரை இன்றைக்கும் கிழவர் என்று யாராலும் சொல்ல முடியவில்லை. வயதால் கிழவராகிவிட்டாலும் உள்ளத்தால் அவர் இளைஞர்.

'உலகம் புகழும் உத்தமர் மகாத்மா காந்தியின் நிலை இதற்கு நேர் மாறானது. நாற்பது வயதைத் தாண்டியவுடனேயே தாத்தாவாகிவிட்டவர் அவர். எல்லோரும் அப்படித்தான் அவரை அழைத்தார்கள். வயதால் இளைஞராயிருந்தாலும் உள்ளத்தால் கிழவராகிவிட்டவர் காந்தி மகாத்மா. இருவகை இளைஞருக்கும் காந்தியும் நேருவும் தகுந்த உதாரண புருஷர்களாக விளங்குகிறார்கள்.

### மூன்று பருவங்கள்

"இளமைப் பருவம் என்கிறேமே, இதைப்பற்றி இன்னும் சிறிது விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டும். மனிதனுக்கு மூன்று பருவங்கள் உண்டு. (1) பாலியப் பருவம் (2) இளமைப் பருவம் (3) கிழப் பருவம்.

### வீடும் மனிதப் பருவங்களும்

"இந்த மூன்று பருவ நிலைகளையும் ஒரு வீட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒவ்வொன்றின் தன்மையும் தெளிவாகும். வீட்டுக் கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் காலை நேரத்தில் பூட்டப்பட்டு இருக்கும். காற்றோ ஒளியோ சரிவர உள்ளே புக முடியாது. ஆனால் நண்பகலில் அப்படியல்ல. கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் திறந்து இருக்கும். வெளியே உள்ள காற்று,ஒளி எல்லாமே உள்ளே செல்லக்கூடியதாக இருக்கும். சிலவேளைகளில் காற்றோடு அள்ளுண்டு குப்பைகளும்கூட திறந்த வீட்டுக்குள் சென்றுவிடலாம்.

"பொழுது சாய்ந்து இருட்டிவிட்டதானால் மீண்டும் காலையில்போல கதவு ஜன்னல்கள் எல்லாம் பூட்டப்பட்டுவிடும். வெளியே உள்ளவற்றிற்கு உள்ளே போக வழி இல்லை. மனிதனின் பாலியப் பருவம் காலை நேரத்துப் பூட்டப்பட்டவீடு போன்றது. முதுமைப் பருவம் இரவு வேளையில் பூட்டப்பட்ட வீடுபோன்றது. இடையில் உள்ள இளமைப் பருவமோ இடைநேரத்தில்-அதாவது பகல் வேளையில்-திறந்திருக்கும் வீடுபோன்றது.

### கருத்துத் திணிப்பு

"திறந்திருக்கும் வீட்டிலே காற்று ஒளி முதலானவை நுழைவதுபோல மனிதனிடமும் இளமைப் பருவத்திலேயே வேண்டியனவெல்லாம் நுழைகின்றன. வேண்டாதன, வெறுக்கத்தக்கன சிலவும் நுழைக்கப்பட்டுவிடுகின்றன. காற்று வீட்டுக்குள் வருவதை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் காற்றோடு குப்பை வீட்டுக்குள் நுழைவதை யாரும் பொறுக்கமாட்டார்கள். கூட்டி வெளியே தள்ளத்தான் செய்வார்கள் பருவம் சரியாக இருக்கிறதே என்ற காரணத்தால் இளமையில்

(9-ம் பக்கம் பார்க்க)


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற நோய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற நொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி(EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற நொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்

திரு. அ. ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

### "ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

## சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கு கடிதம்:

# சிறுபான்மைத் தமிழர் மத்தியில் கொடூரமான ஜாதி வெறி!

## இன்னும், ஏணிப்படி உயர்வு தாழ்வுகள் அவர்களிடம் மலிந்து கிடப்பதேன்?

## உரிமை, அந்தஸ்து கோருபவர்கள் முதலில் தமக்குள் உள்ள குறைபாடுகளைத் தவிர்க்க வேண்டாமா?

சமீபகாலமாக, சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்களது உரிமைகளுக்காக மிக்க அக்கறையோடு கிளர்ச்சி செய்து வருவது யாவரும் அறிந்ததே. இந்தக் கிளர்ச்சி நியாயமானது என்று கருதி, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒத்துழைப்புக் கொடுத்தது; கொடுத்து வருகிறது. அதனால் பாராட்டத்தக்க சில நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பல கோயில்கள் திறந்து விடப்பட்டன. தேனீர்க் கடைகளிலும், உணவு விடுதிகளிலும் அவர்கள் பாரபட்சமற்ற முறையில் உபசரிக்கப்படுவதற்கு வழி பிறந்தது. அவர்களது சமூக நலன்களைக் கவனிப்பதற்கென ஒரு செனட்டரும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

### வெட்கம்

சிறுபான்மைத் தமிழர் அல்லாதவர்கள் மனமிசைந்து இப்படியான காரியங்களுக்குச் சம்மதித்து வரும் சமயத்தில், சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கிடையில் நிலவும் சில செயல்கள் அருவருப்பைத் தருவனவாகவும் கேலிக்கிடமானவையாகவும் உள்ளன. சிறுபான்மைத் தமிழ் மக்களும் சரி, அவர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகக் கருதப்படும் சிறுபான்மைத் தமிழர் மகா சபையும் சரி, வெளியுலகுக்குத் தங்களது ஐக்கியத்தையும், சில முற்போக்கு எண்ணங்களையும், நடவடிக்கைகளையும் பிரபலப்படுத்தினாலும், அவர்களுக்குள்ளே கொடூரமான ஜாதிவெறியும், தவறான போக்குகளும் தாண்டவமாடுகின்றன என்பதை அறிய வெட்கமாக இருக்கிறது.

### முந்திய கடிதம்

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் மாஜிப் பிரமுகர் ஒருவர், இரு வாரங்களுக்கு முன், சுதந்திரனில் எழுதிய கடிதத்தில், "ஆரிய குளத்தைச் சேர்ந்தவர்கள் தான் அகில உலகுக்கும் வழி காட்டிகளோ?" என்று கேட்டிருந்தது ஜாதி வெறியில் வெளிப்பட்ட வார்த்தையே தவிர வேறல்ல.

### சிறுபான்மைத் தமிழரின் ஜாதி வெறி

பருத்தித்துறையில் உள்ள வராத்துப்பளையைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழரான ஒரு ஆசிரியர், சிறுபான்மைத் தமிழர்களுக்குள்ளேயே உள்ள வேறொரு சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்ததன் காரணமாக, ஜாதியிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார். கொழும்பிலே வேலை பார்க்கும் அவர், அணிமையில் அவர் பிறந்து வளர்ந்த வீட்டில் நடைபெற்ற மிக நெருங்கிய உறவினரது மரணச் சடங்குக்குக் கூட அழைக்கப்படாமல் பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார் என்றால், சிறுபான்மைத் தமிழர்களிடையே இருக்கும் ஜாதி வெறியின் கொடுமை என்னே! ... உறவினர் ஒருவர், சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முக்கிய பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி எத்தனையோ செயல்கள் நடைபெறுகின்றன.

### சபையின் பாராட்டு பெற்ற திருமணங்கள்

இத்துடன் அவர்கள் மத்தியில் உள்ள வேறொரு தவறான போக்கையும் கூற வேண்டியது அவசியமாகிறது. யாழ்ப்பாணத்தில் குருந்த மட்டக்களப்புக்குப் படிப்பிக்கச் சென்றபட்டதாரி ஆசிரியர் ஒருவர், அங்கு உயர் ஜாதி என்று கொள்ளப்படும் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். இவர் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் முக்கிய பிரமுகர் ஒருவரின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. அணிமையில் பலாலி வீதியைச் சேர்ந்த ஒரு தொழிலாளி, அடுத்த வீதியில் உள்ள உயர் ஜாதி என்று சொல்லப்படும் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பலாத்காரமாக அழைத்துச் சென்று திருமணம் செய்துள்ளார். இந்த இரு காரியங்களுக்கும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் ஆதரவும், வரவேற்பும், பாராட்டுகளும் கிடைத்தன.

### புரட்சி

தாங்கள் உயர் ஜாதியினர் என்று சொல்லிக்கொண்டிருக்கும் மக்களிடையில் சம அந்தஸ்துப் பெற்றுத் திருமணமும் செய்ய விரும்பும் சிறுபான்மை தமிழ் மக்கள், தங்களுக்குள்ளே கொடிய ஜாதிமுறைகளை அனுசரித்துக்கொண்டு 'புரட்சி' செய்வது கொஞ்சங்கூடப் பொருத்தமில்லாத செயலாகும். தன்னைத் திருத்த முடியாதவன், மற்றவர்களின் குறைகளைப் பற்றிப் பேசுவதற்குச் சிறிதும் அருகதையற்றவன். ஆகவால், சிறுபான்மைத் தமிழர்கள் முதலில், தங்களுக்குள் நிலவும் ஏணிப்படிகளை அகற்றிய பின்னரே, உரிமை, அந்தஸ்து பற்றிப் பேச முற்பட வேண்டும். இல்லையென்றால் அவர்களுடைய கோரிக்கைகளும், கிளர்ச்சிகளும் கேலிக்கிடமானவையாகிவிடும்.

—வ. தர்மலிங்கம்

பருத்தித்துறை
18—10—59

# தேர்தல் நிதி தருக

வடமாகாணத்தில் இரண்டு உபதேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. வன்னியசிங்கத்தின் மரணத்தால் காலியான கோப்பாய்த் தொகுதியிலும், திரு சி. சுந்தரலிங்கத்தின் ராஜினாமாவினால் காலியான வவுனியாத் தொகுதியிலும் அந்த உபதேர்தல்கள் நடக்கும்.

இந்த இரண்டு உப தேர்தல்களும் பொதுவாகத் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்கும் விடப்பட்டிருக்கும் சவாலாகும். எங்கள் மக்களும் கட்சியும் தமிழுக்கும் தமிழருக்கும் பரிபூரண விசுவாசமாக இருந்து, தமிழர் நலனுக்காகப் போராடக் கூடிய தகுதி வாய்ந்த அபேட்சகர்களை உபதேர்தல்களுக்கு நிறுத்த முடியுமா என்பதுதான் அந்தச் சவால் ஆகும்.

குறிப்பாக வவுனியா, நன்றாக உழைக்கக் கூடிய சிறந்த ஒரு தொண்டரை—அந்தப் பிராந்தியத்தைத் தமிழர் பிரதேசத்தின் ஒருபகுதியாகப் பாதுகாத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க அயராது போராடக் கூடிய ஒரு வீரனை, தெரிவு செய்தாக வேண்டும். தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணாக அமைந்திருப்பது வவுனியா.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும், அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருப்பதானால் அவருக்கு கணிசமான அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக தமிழர்களுள் சொந்த வருமானம் உள்ளவர்களிடம் இலங்கையில் தமிழினம் அழிந்து போகாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம், அதற்கான உணர்வு போதிய அளவில் இல்லை, அதே நேரத்தில் தமிழினத்தின் நலனிலும் நல் வாழ்விலும் அக்கறை கொண்ட ஆண்கள்பெண்கள்—இரு பாலரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட பணபலம் இல்லை. அதாவது வருமானம் கிடையாது.

இந் நிலையில், தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணி நாட்டமும் கொண்ட ஒருவரையே வவுனியாத் தொகுதித் தேர்தலுக்கு அபேட்சகராகத் தெரிந்தெடுக்க வேண்டும்; அத்தோடு அவருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்வதையும் பணம் செலவு செய்து உழைப்பதையும் கட்சியே பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது.

இதே போன்ற நிலைமைதான் கோப்பாய்த் தொகுதியிலும். நாம் அங்கு நிறுத்தும் அபேட்சகரான திருமதி கோமதி வன்னியசிங்கத்துக்கு ஆதரவு தருவது மட்டுமல்ல, அவருக்காக தேர்தல் வேலைகளைச் செய்து செலவினங்களைக் குறைக்கவும் அந்தத் தொகுதி மக்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். அப்படி இருந்தும், ஒருசில ஆயிரம் ரூபாய்கள் அங்கே செலவு செய்துதான் தீர வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது அந்தச் செலவினம் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி நிதி உதவியையும் வேறு உதவிகளையும் கோரி நிற்கிறது. கட்சி கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்திருக்கிறது; வருங் காலத்திலும் அது தொடர்ந்து செய்யும் எனவே கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாக தந்து உதவுங்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு—3.

# புத்தகங்கள் பத்திரிகைகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கிறது.

### கல்விப் போதனை

வயது வந்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் நூலகத்தின் நான்கு கிளை நூலகங்களில் மாலை நேரத்தில் வாரத்தில் நான்கு நாட்கள் கல்வி கற்பிக்கப்படுகிறது. நகர மன்றப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் அந்த வகுப்புகளில் கல்வி கற்பிக்கின்றார்கள். கல்லூரித் தேர்வுகளுக்காகப் படிப்போர் மட்டும் குறைந்த கட்டணம் கொடுக்கின்றனர். மற்றவர்கள் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை.

பிள்ளைகளுக்கும் ஆரம்பில் பொது நூலகம் பணியாற்றுகிறது. பிள்ளைகள் படிப்பறைகளும், இசை மண்டபங்களும் நூலகத்தில் உள்ளன. 1958ம் ஆண்டு கோடை விடுமுறைக் காலத்தில் நூலகத்தில் பிள்ளைகளுக்குக் கதை சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நூலகத்தில் இத்தகைய பல பணிகள் நடைபெறுவதால், புத்தகப் படிப்பு குறைந்துவிடவில்லை; அது ஐந்தில் இரு மடங்கு அதிகமாகியிருக்கிறது.

### மாபோலேயில் குத்புல் அக்தாப் தினம்

மாபோலை ஜும்ஆ பள்ளி வாசல் குத்புல் அக்தாப் தின கொண்டாட்டம் அணிமையில் மா. ஜ. ம. ப. சபையின் போஷகர் ஜனப் எம். எல். எம். நிசார் தலைமையின் கீழ் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வைபவத்தில் மௌலவி, தலைபாதிஹா, ஒதலும் ஜனப் அப்துல் வஹ்ஹாப் சாஹிபின் "குவலயம் போற்றிடும் குத்புநாயகம் அவர்களின் குணநிசயங்கள்" எனும் சொற்பொழிவும், அன்னதானம் வழங்கலும் முக்கிய இடம் பெற்றன.

### அருந்ததியர் சங்க சொற் பயிற்சிக் கூட்டம்

அகில இலங்கை அருந்ததியர் சங்க செயற்பயிற்சிக் கூட்டம் கடந்த 19-10-59ல் சங்கப்பணி மனையில், சங்கத் தலைவர் திரு மூ. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் திரு மூ வேலாயுதம் "சொற்பயிற்சியும் சங்கமும்", என்பது பற்றி நீண்ட நேரம் பேசினர். திருவாளர்களான: அழகிரைவனர், அருள், குருசாமி, சன்முகவேலு, செல்லையா, முத்தையா ஆகியோர்கள் பல தலைப்புகளோடு சொற்பயிற்சி பெற்றபின், பொதுச் செயலாளரின் நன்றியுரையோடு கூட்டம் இனிதே கலைந்தது.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 நவம்பர் மாதம் 1-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# வெ(ட்)டி வீரர்கள்!

வெட்டி வீரர்களாக விளங்கிய நமது மந்திரிகள் இப்போது வெடி வீரர்களாக மாறிவிட்டார்கள்! சிலருடைய கையிலே கைத் துப்பாக்கி. பலருடைய பையிலே சுழல் துப்பாக்கி. இந்த நிலையில் 'வேட்டை'க்காரர்களின் கூட்டமாக விளங்குகிறது மந்திரிசபை!

யாரை வேட்டையாடப் பார்க்கிறார்கள்? கழனியை அழிக்கும் காட்டு மிருகங்களையா? அன்றித் தோட்டத்தை அழிக்கும் துட்ட மிருகங்களையா? அல்ல; அல்ல. அப்படியானால் நீட்டுத் துப்பாக்கியன்றோ வேண்டும். கைத் துப்பாக்கியால் மனிதரைத்தான் சுட முடியும் சுழல் துப்பாக்கியால் மக்களைத்தான் சாட முடியும். அப்படியானால் யாரை வீழ்த்துவதற்காக இவர்கள் ஆயுதபாணிகளாகி யிருக்கிறார்கள்?

ஏன், தம்மைத் தேர்ந்தனுப்பிய மக்களே தம்மைத் தாக்கக்கூடும் என்ற பயமும் பீதியும் அவர்களை பீடிக்க ஆரம்பித்து விட்டனவா? அதனால்தான் துப்பாக்கியேந்தித் தற்காப்புத் தேடிக்கொள்ளுகிறார்களா மக்கள் அரசாங்கத்தின் இந்த மதிப்பு மிக்க மந்திரித் துரைகள்? இப்படியான கேள்விகள் எழுவது இயற்கையே அல்லவா?

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என்பதை நாம் ஒவ்வொருவரும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அன்று நடந்ததையும் இன்று நடப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வேடிக்கையாகவும் இருக்கிறது; வேதனையாகவும் இருக்கிறது.

1956-ம் ஆண்டு எம். ஈ. பி. அரசாங்கம் திரு பண்டாரநாயகாவின் தலைமையில் வெகு கோலாகலத்துடன் ஆட்சிக்கு வந்தது. முதலாவது பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்ற அன்று 'பொது மக்கள்' எனப்படுவோர் பாராளுமன்றத்தின் புனிதத்துவத்தைப் பங்கப்படுத்தினார்கள்.

கட்டுப்பாடற்ற 'செம்மறிக் கூட்டம்' ஒன்று பாராளுமன்றத்தின் மூல ஸ்தானத்துக்குள்ளேயே அத்துமீறிப் புகுந்து சபைத் தலைவர் ஆசனத்திலும், மக்கள் பிரதிநிதிகள் ஆசனங்களிலும் ஏறிக்குதித்து விளையாடிக் கும்மாளமடித்தது. அன்றேதான் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றிற்கு முதன் முறையாக வெடிவைக்கப்பட்டது என்பதை அரசாங்கம் உணரத் தவறிவிட்டது.

அந்தக் காலிக் கூட்டத்தின் கொட்டத்தை திரு பண்டாரநாயகா 'மக்கள் யுகத்தின் மலர்ச்சி' யென்றும், மக்கள் அரசாங்கம் ஏற்பட்டதால் ஏற்பட்ட பொது மக்கள் குதூகலம் என்றும் வியாக்கியானம் செய்து தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டார்.

இந்த சம்பவத்தின் பின்னால் சட்டமும், ஒழுங்கும், கட்டுப்பாடும் இந்த நாட்டில் தொடர்ந்து மீறப்பட்டு வந்திருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் பண்டாரநாயகா அரசாங்கத்தின் ஆதரவோடு, பக்கபலத்தோடு இத்தகைய மீறுதல்கள் நடைபெற்றுள்ளன.

நாட்டில் வளர்ந்துவரும் அபாயகரமான நிலையை சுதந்திரன் உட்படப் பல பத்திரிகைகளும் அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்தன ஆனால் அரசாங்கத்துக்குச் சுரணை ஏற்படவில்லை. ஆட்சியிலிருந்த வெ(ட்)டி வீரர்கள் உண்மை நிலையை உணர்வதற்கு தம் தலைவரான ஒரு பிரதமர் பட்டப்பகலில் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்யப்பட்டுப் பச்சை இரத்தம் பரிமாறும்வரை காத்திருக்கவேண்டியிருந்தது! அதன் பின்னர் தான் அவர்களுக்கு ஞானோதயம் ஏற்பட்டது!

இன்றைய நிலை என்ன? எந்த அரசாங்கம் மூன்று வருஷங்களுக்கு முன் தன்னைத்தானே 'மக்கள் அரசாங்கம்' என்று கூறிக்கொண்டு மார் தட்டியதோ, அதே அரசாங்கம் இன்று மக்களைப் பாராளுமன்றத்துக்குள் புக விடுவதற்குத் தானும் திராணியற்றதாகப் பயந்து, பயந்து கதவுகளைப் பலமாக இறுக்கி மூடிக்கொண்டு கூட்டங்களை நடத்துகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் அரசாங்கத்தை, எதிர்த்துப் பொருதும் விரோதிகளான எதிர்க்கட்சியினர் பொது மக்களின் மத்தியிலே எதுவித பயமும் பாதுகாப்பும் இல்லாமல் சுயேச்சையாக நடமாடுகிறார்கள். அதேவேளையில 'மக்கள் அரசாங்கத்'தின் மந்திரிகள் மக்களைக் கண்டு பீதியினால் வெட வெடக்கிறார்கள்- பின்வாங்கி ஒளிந்துகொள்ளுகிறார்கள். வான்முட்ட மதில் சுவர் கட்டி அதன் பின்னால் மறைந்து கொள்ளலாம் என்று பிரயத்தனப்படுகிறார்கள்.

பொலீஸ், இராணுவம், தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை முதலிய சகல படைகளையும் உடைய அரசாங்கத்தின் மந்திரிகள் போதாக்குறைக்கு, தம் கைப்படையாகவும் சுழல் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டுதான் இந்த நாட்டில் நடமாட வேண்டியிருக்கிறதென்றால் இங்கு நடைபெறுவது உண்மையில் மக்கள் அரசாங்கந்தானா என்று கேட்க விழைகின்றோம்.

எந்தத் துர்ச் சக்திகளுக்கு இந்த அரசாங்கம் தூபம் போட்டு, தீபம் காட்டி ஆராதித்துவந்ததோ அந்தப் பில்லிச் சணியங்களே இன்று இந்த அரசாங்கத்தை விழுங்கி விடுவதற்கு வாயைப் பிளந்து ஊழிக் கூத்து ஆடுகின்றன. முற்பகல் செய்த பாவமும் பழியும் திரண்டு இப்பகல் உருப்பெற்றிருக்கும் நிலை இது. சுழல் துப்பாக்கி தாங்கிய வெ(ட்)டி வீரர்கள் இந்த அழிவுப் படலத்தின் இறுதிக் கட்டத்தைச் சிறிது நாள் தள்ளிப் போடலாமேதவிர, அறவே தவிர்க்க முடியாது என்பதை அறம் என்னும் நம் அகில உலகிற்கும் காட்டத்தான் போகிறது.

# 'சிங்களம் மட்டும்' குரல் எழுப்பப்பட்டது துரதிர்ஷ்டவசமானது

## அது இல்லாமலே பண்டாரநாயகா பதவிக்கு வந்திருக்க முடியும்

### பாராளுமன்றத்தில் தமிழரசுத் தந்தை

தமிழரசுக் கட்சியின் சார்பில் மறைந்த பிரதமருக்கு பாராட்டுரை வழங்குவதில் கலந்துகொள்ளுகிறேன்.

காலஞ்சென்ற பிரதமர் கொல்லப்பட்ட விதத்தைக் கண்டித்து கௌரவ அங்கத்தவர்கள் பேசியவற்றை நானும் ஆம் ஓதுகிறேன். மந்திரிமாரும் அரசியல்வாதிகளும் கடைப்பிடிக்கும்கொள்கைகளுக்கும் வைத்திருக்கும் கருத்துக்களுக்கும் பரிசு காலஞ்சென்ற பிரதமருக்கு கிடைத்ததுபோன்றது தான் என்றால் நாட்டின் எதிர்காலம் இருண்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.

#### பிரதமர் பலியும் பெறுபேறும்

ஒருவர் எந்தக் கருத்தையும் வைத்திருக்கலாம், தம்முடைய திட்டங்களை எவருக்கும் அஞ்சாது அமுல் நடத்த அவருக்கு உரிமையுண்டு. ஜனநாயக கோட்பாட்டின் மிக முக்கிய அம்சம் இது. கடந்த சில வருஷங்களில் நாட்டில் பலாத்காரம் தலைதூக்கியபோது அதைக் கண்டிக்கவும் தவிர்க்கவும் நாமெல்லோரும் தவறிவிட்டோம். அதனால் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பலாத்கார வழிகள்தான் சிறந்தவை என்ற எண்ணம் மக்கள் மனதில் வளர்வதற்கு நாம் ஒவ்வொருவரும் தான் பொறுப்பேற்க வேண்டும். பிரதமரை நாடு பலிகொடுத்தது பலாத்காரத்தை ஒரு அரசியல், சமூக, ஆயுதமாகப் பாவிக்கும் தீங்கை ஒழிக்கும் என்றும் அறிம்லைச நெறி நாடெங்கிலும் நிலவும் என்றும் நம்புவோமாக.

#### சரித்திரத்தில் பெயர்

கடந்த முப்பது நாற்பது வருஷங்களாக நம்மிடையே வாழ்ந்த குறிப்பிடத்தக்க பிரமுகர்களில் திரு பண்டாரநாயகாவும் ஒருவர் என்று சரித்திரத்தில் பொறிக்கப்படுவ. எனக்கு திரு பண்டாரநாயகாவை 1915லிருந்து தெரியும். அப்போது நாம் இருவரும் முகத்துவாரம் அச் தோமாஸ் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தோம். கல்லூரியில் அப்போது இருந்த திறமைசாலி மாணவர்களில் ஒருவராகத் திரு பண்டாரநாயகா விளங்கினார்.

#### யு. என். பி. யும் பண்டாரநாயகாவும்

1946ல் சோல்பரி அரசியல் திட்டம் வரவிருந்ததோடு திரு பண்டாரநாயகா திரு டி. எஸ் சேனநாயகாவுடன் சேர்ந்து யு. என். பி. கட்சியை ஸ்தாபித்தார். முறைப்படி திரு டி. எஸ்.



திரு. எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயகா

சேனநாயகாவுக்குப் பின்னர் திரு பண்டாரநாயகா பிரதமர் பதவிக்கு வந்திருக்க வேண்டும் ஆனால் யு. என். பிக் கட்சிக்குள் நடந்த சூழ்ச்சிகளால் அவர் கட்சியிலிருந்தே விலக வேண்டியதாயிற்று.

#### எமது கடிதம்

திரு பண்டாரநாயகா யு. என். பி, யிலிருந்து விலகிய போது நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்: "நொந்துபோய் துக்கத்தில் இருக்கும் வேளையில் ஒரே ஒரு உற்சாக வார்த்தை. மாற்று அரசாங்கம் இருக்கக் கூடிய சாத்தியக்கூறு இல்லாத இடத்து ஜனநாயகம் செயல் பட முடியாது. மக்களில் பெரும் பகுதியினர் அந்த மாற்று அரசாங்கத்தை நீங்கள் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பர். பொறுமையாகவும் தைரியமாகவும் இருங்கள். என்ன தான் நேர்ந்தபோதிலும், நீங்கள் அவர்களுடைய பிடியிலிருந்து தப்பி வெளியே வர சாமர்த்தியமாக நடந்துகொண்டீர்கள். அல்லாவிட்டால் அவர்கள் உங்களைச் 'சம்பல்' போட்டிருப்பார்கள்."

#### பண்டாரநாயகா கடிதம்

இதற்குத திரு பண்டாரநாயகா தமது கைப்பட்ப் பதில்கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"அன்புள்ள செல்வா,

உங்கள் அன்பான கடிதத்துக்கு என் நன்றி. அந்தக் கடிதம் எனக்கு மிக்க உற்சாகம் ஊட்டுகிறது."

யு. என். பி. பதவியில் இருந்தபோது அதை யாராலும் தோற்கடிக்க முடியாது போல் தோன்றியது. திரு பண்டாரநாயகாவினால்தான் அது முடிந்தது அவர் ஒருவரால்தான் முடியக்கூடியதாகவும் இருந்தது. சிங்கள மக்களை அவர் கவர்ந்தார். அவர்கள் உதவியால் யு. என். பியை கவிழ்த்தார்.

#### சிங்களம் மட்டும் போர்க்குரல்

1951-ல் திரு பண்டாரநாயகாவின் எதிர்காலத்தைக் கணிப்பது எவருக்கும் கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால் என்னைப் பொறுத்த வரையில், "சிங்களம் மட்டும்" என்ற ஆபத்தான போர்க் குரலோடு அவர் பதவிக்கு வருவார் என்று நான் எண்ணவில்லை. "சிங்களம் மட்டும்" என்ற போர்க் குரல் இல்லாமலே 1956 தேர்தலில் அவர் கட்சி ஜெயித்திருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

யூனைல் ஒன்று, யு. என். பியை விடத் திரு பண்டாரநாயகாதான் மக்களில் பெரும் பகுதியினரிடம் பிரசாரம் செய்தார். பல விஷயங்களில் திரு பண்டாரநாயகாவின் கொள்கை முந்திய அரசாங்கத்தினுடையதைக் காட்டிலும் முற்போக்கானதாய் இருந்தது. ஆகவே, அவர் மொழிக் கொள்கையைக் கடைப் பிடித்தது துரதிர்ஷ்டவசமானதாகும். இந்த மொழிக் கொள்கை நாட்டை இரண்டாகப் பிரித்தது. அத்தோடு தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இது ஜனநாயக விரோதமானதுமாகும்.

#### வெறுப்பு இல்லை

காலஞ்சென்ற பிரதமரின் மொழிக்கொள்கையை முற்றுக எதிர்க்கும் ஒரு மக்கள் சமூகத்தையும் அரசியல்கட்சியையும் சார்ந்தவன் தான். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு பண்டாரநாயகா தமிழ் மக்கள்மீது வெறுப்போ அருவருப்போ கொண்டிருக்கவில்லை. அதே போல நாங்களும் அவர்மீது அருவருப்போ வெறுப்போ கொள்ளவில்லை.

#### எதிரிகள் செய்த வேலை

மிகுந்த திறமைசாலியாகவும் ஆர்வமுள்ள அரசியல்வாதியாகவும் இருந்த காரணத்தால் அவர், நாட்டில் தமிழர் சம்பந்தப்பட்ட மட்டிலும் நிலைமையைக் காணத் தவறவில்லை. அவருடைய பெருமை குறித்து இதைச் சொல்லுகிறேன்: தமிழர்களைப் பாதித்த தம் கொள்கைகளின் உக்கிரத்தைத் தணித்து ஆவன செய்ய அவர் விரும்பினார். அந்த வகையில் அவர் எவ்வளவோ சாதித்திருக்கலாம். ஆனால் அதற்கு அவருடைய எதிரிகள் அவரை விடவில்லை. தமிழர்களை அவர் சாந்தப்படுத்துவதற்கு அவர்கள் தடையாக இருந்தார்கள்.

அவருடைய அரசாங்கத்தின் ஒரு பகுதி எங்களைப் பாதித்தது என்பதைக்குறிப்பிடுவது என்னுடைய கடமை. ஆனால் அதைக் குறிப்படுவதானது திரு பண்டாரநாயகாவின் பெருமையையும் அவருடைய மகத்

(9-ம் பக்கம் பார்க்க)

# 55வயதுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிக்கொள்ள வேண்டியது தான். ஆயினும் இதுவரை அரசாங்கம் அனுஷ்டித்து வந்த கொள்கை வேறுவிதமானது 55 வயதை அடைந்தவர்கள் மேலும் சேவை செய்யக்கூடிய தகுதியோடு இருந்தால் அவர்களைப் பின்னரும் சேவையிலிருக்க அனுமதித்தது. அவர்களின் பதவியை மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட கால அளவுக்கு புதுப்பித்து வந்தது.

இந்த மாதத்தோடு இந்த நடைமுறை பொதுமராமத்து இலாகா ஓவஸியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கைவிடப்பட்டுவிட்டது. 55 வயதானவர்கள் கண்டிப்பாக விலகித்தான் ஆக வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

இம்மாதம் 55 வயதை அடைந்த பல ஓவஸியர்கள் தாம் மேற்கொண்டும் சேவையில் இருக்க அனுமதி கோரி விண்ணப்பித்தனர். அவர்களின் விண்ணப்பங்கள் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டன.

குறிப்பாக ஒருவருக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டது. அவர் பொதுமராமத்து இலாகா ஓவஸியர்கள் சங்கத் தலைவர் என்பதும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க இலாகாகளில் தினமும் அதிகரித்துவரும் அசிரத்தை

## ஊழியரின் தவறினால் பொதுமக்கள் படும் உபத்திரவம்

### தேதிப் பிழையினால் ஆசிரியர் பட்ட அவதி

அரசாங்க அதிகாரிகள், ஊழியர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோரது அசிரத்தையினாலும், அவர்கள் செய்யும் கவனயீனமான தவறுகளினாலும் பொதுமக்கள் பெரிதும் துன்பப்பட வேண்டிய சம்பவங்கள் இப்போது அதிகரித்துக் கொண்டே வருகின்றன. சில எழுத்துப் பிழைகளே பலருக்கு வீண் அலைச்சலையும் பணச் செலவையும் விளைவித்த நிகழ்ச்சிகளும் உண்டு.

"வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில் அரசாங்க வேலைகளில் தவறுகளோ, பிழைகளோ ஏற்படுவது அபூர்வம். ஆனால் இன்று எல்லா இலாகாகளிலும், காரியாலயங்களிலும் தப்பும் தவறுமாகவே காரியங்கள் செய்யப்படுகின்றன" இவ்வாறு மேற்கூறியதுபோன்ற ஒரு சம்பவத்துக்குள்ளாகிய ஒரு ஆசிரியர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

#### அந்தக் காலமும் இந்தக்காலமும்

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

"அந்தக் காலத்தில் ஒரு குமாஸ்தாவால் தயாரிக்கப்பட்டு, ஒரு டைபிஸ்டால் டைப் அடிக்கப்பட்ட கடிதத்தை மேலதிகாரியென்ற ஸ்தானத்திலிருந்தவர் மிகவும் கவனமாகப் படித்து, தேதி, வாசகம், புள்ளி விவரம் எல்லாம் சரியாகவிருக்கின்றனவா என்று சரி பார்த்து, அதன் பின்னரே கையொப்பமிடுவார். இன்று அப்படியல்ல; மேலதிகாரியென்றிருப்பவர் சுழலும் காற்றாடியின் அடியிலே தூங்கும் நிலையில் உட்கார்ந்து, சிகரெட்டை ஊதிக்கொண்டே கண்களை மூடிக்கொண்டு கடிதங்களுக்குக் கையெழுத்துப் போட்டுவிடுகிறார். இதனால் அரசாங்கக் காரியங்கள் தப்பும் தவறும் மலிந்து ஊழல் மயமாகிவிட்டன."

#### ஒரு உதாரணம்

மட்டக்களப்பிலுள்ள ஒரு நோயாளியான ஆசிரியருக்கு கொழும்பிலுள்ள ஒரு வைத்திய நிலையத்தில் நடைபெறும் மெடிக்கல் போர்ட்டின் முன்னால் ஆஜராகும்படி கட்டளை கல்வி இலாகாவிலிருந்து பறந்தது.

நோயாளியான நிலையில் வேலையுமில்லாத அந்த ஆசிரியர் ஆணைக்கும் இருவரைக் கூட்டிக்கொண்டு ரயில்ஏறிப் பணம் செலவழித்து கொழும்புக்கு வந்து சேர்ந்தார். குறிப்பிட்ட வைத்திய நிலையத்துக்குப் பரிசோதனைக்காகச் சென்றார்.

#### அதிகாரி எரிந்து விழுந்தார்!

வைத்திய நிலையத்திலிருந்த அதிகாரி ஆசிரியர் மீது எரிந்து விழுந்தார். "உமக்குப் பரிசோதனை வைக்கப்பட்ட தினம் கடந்த வாரம் 21-ந் தேதி ஆயிற்றே. ஒரு வாரம் கழித்து இன்று வந்திருக்கிறீரே. உமக்காக மூன்று டாக்டர்கள் கடந்த வாரம் இதே நாளில் காத்திருந்துவிட்டுக் கலைந்தார்கள். வர முடியாவிட்டால் முன் கூட்டியே தந்தியாவது அடித்திருக்கலாம் அல்லவா? அறிவிருக்கிறதா?" என்று அந்த அதிகாரி கேட்டார்.

"எனக்கு அறிவிருக்கிறது. அத்தோடு உங்களுக்கு கொஞ்சம் ஆத்திரமும் இருக்கிறது. இதோ இந்தக் கடிதத்தைச் சற்றுப் பொறுமையோடு பாருங்கள்" என்று ஆசிரியர் நீட்டினார். கடிதத்தைப் படித்த அதிகாரி பேந்தப் பேந்த விழித்தார். கடிதத்தில் 28-ந் தேதிதான் ஆஜராகும்படி டைப்படிக்கப்பட்டிருந்தது!

#### சமாதானம்

அதிகாரி சமாதானம் பண்ண முற்பட்டார். எங்கோ பிழை நேர்ந்துவிட்டதாகக் கூறினார். ஆசிரியரைக் கல்வி இலாகாவிற்குப் போய் விஷயத்தை எடுத்துச் சொல்லுமாறு பணித்தார்.

கல்வி இலாகாவுக்குச் சென்று விஷயத்தை முறையிட்டால் அவர்களும் ஒருவர் மேல் ஒருவர் பழியைப் போட்டார்களேதவிர உருப்படியான காரியம் எதையும் செய்வதாயில்லை. எப்போது அடுத்த மெடிக்கல் போர்ட் என்ற விவரத்தினைத் தானும் அறிவிப்பதாயில்லை.

#### தண்டனை கிடைத்திருக்கும்

"வெள்ளைக்காரன் காலத்தில் என்றால் இந்தக் குற்றம் புரிந்த குமாஸ்தாவும் கையொப்பமிட்ட மேலதிகாரியும் உடனடியாக விளங்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருப்பார்கள் அல்லவா? சுதந்திர இலங்கையில் தவறு புரியத்தான் சுதந்திரம் உண்டு போலும்" என்று முன்கூறிய ஆசிரியர் மேலும் தெரிவித்தார்.

---

## 'சிங்களம் . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தான சாதனைகளையும் பாராட்டுவதற்கு எந்தவிதத்திலும் தலைடயாக இல்லை. அவருடைய பிரிவுக்கு வருந்துகிறோம், திரு பண்டாரநாயகாவின் மரணத்தால் கவலையடைந்துள்ள திருமதி பண்டாரநாயகாவுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் அனுதாபம் தெரிவிப்பதில் பங்கு கொள்ளுகிறோம்.- இவ்வாறு திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் 28-10-59-ல் பாராளுமன்றத்தில் பேசினார்.

---

## அன்பில் துவங்கி அருளில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவனிடம் ஏதாவது திணிக்கப்படுமானால், திறந்த வீட்டுக்குள் வரும் குப்பையை வெளியே தள்ளுவதுபோல அதையும் அவன் தள்ளத்தான் செய்வான். சமயத்துக்கும் இது பொருந்தும். அவனது இளம் உள்ளத்து எழுச்சிதான் அதற்குக் காரணம். அவன் குற்றவாளி அல்லன். சமயத்தைப் புகுத்தச் சென்றவரும் குற்றவாளி அல்லர். தமக்கு நல்லது என்று பட்டதைத்தான் அந்தச் சமயவாதி இளைஞன் உள்ளத்திலும் பதிக்கச் செல்கிறார். அதனால் அவர் மீதும் குற்றம் சுமத்துவதற்கில்லை. அதே வேளையில் தம்மால் நம்ப முடியாத ஒன்று தம்மீது திணிக்கப்படுகிறதே என்று அதை உதைத்துத் தள்ளுபவனையும் நாம் தப்புச் செய்தானே என்று சாடுவதற்கு இல்லை.

"நாம் கொடுக்கும் கருத்தை இளைஞன் கொள்ளவில்லையே என்று சமயவாதி கவலை சொல்வதற்கும் இல்லை. இளைஞனை நாஸ்திகன் என்று நச்சரிப்பதற்கும் இல்லை. அதால் யாருக்கும் எதுவித பயனும் கிடையாது.

"பெரியவர் சொன்னதை இளைஞன் எப்படியும் நம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுக்குப் பொருந்துமா? ஒரு சிறு உதாரணம தருகிறேன்.

#### தந்தை சொற் கேட்ட தனயன்

" 'கஸபியன்கா' என்ற தலைப்பில் அழகான ஒரு ஆங்கிலக் கவிதை உண்டு. அதிலே இரண்டு பாத்திரங்கள். ஒருவன் கஸபியன்கா என்ற இளைஞன். மற்றவன் அவனுடைய தந்தை-கப்பலின் தலைவன். இருவரும் கப்பலிலே செல்கிறார்கள். நடுக்கடலிலே விபத்து ஏற்படுகிறது. கப்பல் தீப்பற்றிக் கொள்கிறது. தந்தை பாயை இறக்கியும் இன்னும் ஏதேதோ செய்தும் தீயோடு போராடுகிறார். மகனை அழைத்து 'தம்பி நீ இங்கேயே நில்' என்று ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு மீண்டும் தீயோடு [illegible] கப் போராடுகி[illegible] வில்லை. அக்கினி அவரை விழுங்கி விடுகிறது. அத்தோடு அதன் வேகம் தணியவில்லை. இளைஞன் நின்ற இடத்தை விளாசிக்கொண்டு வருகிறது. இதைப் பார்க்கிறான் அவன். தம்மைப் பலிகொள்ளப் போகிறது தீ என்பதையும் உணர்கிறான். ஆயினும் அவன் நின்ற இடத்திலிருந்து இம்மியும் அசையவில்லை. தந்தையின் கட்டளையை மீற அவன் விரும்பவில்லை. அதனால் அந்த இடத்திலேயே வெந்து அவன் சாம்பலானான்.

#### அறிவுக்கு இசைய வாழும் பழக்கம்

"தந்தை சொல்லிவிட்டாரே, அதனால் எந்த நிலைமையிலும் தாம் அவர் சொல்லைத் தட்டி நடக்கக் கூடாது என்ற மூட கொள்கைக்குப் பதிலாகத் தன் சுய புத்தியைக் கொண்டு படார் என்று கடலில் குதித்து அவன் உயிர்பிழைத்திருக்கலாம்.

"இது நடைபெறவில்லை. நின்ற இடத்தில் நொந்து போய் நின்றான்; செத்தான். அதற்காகப் பாராட்டப்பட்டான் பாட்டில். இது வரவேற்கத் தக்கதா? ஒருவனின் சுய அறிவுக்கு வேட்டு வைக்கும் வழக்கம் நாட்டுக்குக் கேடுதான் விளைவிக்கும். இளைஞர்கள் தம் அறிவுக்கு இசைய வாழவும் பழக்கப்பட வேண்டும்.

#### சுவாமி விவேகானந்தா

இளைஞர் விவேகானந்தரை எடுத்துக் கொள்ளுங்கள். 'கடவுள் உண்டா? கடவுள் உண்டா?' என்று கேட்டுக்கொண்டு அலைந்தார். 'ஆம் உண்டு, நான் சொல்லுகிறேன். நீ நம்பு' என்றவாறு பலர் சொன்னார்கள். ஆறுதல் அடைந்தாரா அவர்? இல்லை மீண்டும் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டார். துஷ்டன் என்ற பெயரை வாங்கிக் கட்டிக் கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரை அடைந்தார். தொடுத்தார் அதே கேள்வியை. 'கடவுள் உண்டா என்று தானே கேட்கிறாய். ஆம் உண்டு. நான் காட்டுகி[illegible] பதில் தான் விவேகானந்தரைச் சாந்தப் படுத்தியது. அவருடைய துடிப்பை ஒருவாறு அடக்கி ஆண்டது.

#### கேள்வியும் பதிலும்

"இளைஞர்கள் எப்பொழுதும் கேள்விகள் கேட்கவே செய்வார்கள். துடிக்கும் இளமையில் மிடுக்கான கேள்விகளுக்கு குறைவிருக்காது. அவற்றிற்கு தகுந்த விடைகள் அளிக்க வேண்டும். மழுப்ப முனைந்தால் உள்ள மதிப்பும் கெடும். இளைஞர்களின் சமயக் கேள்விகளுக்கு சரியான பதில்கள் கொடுக்க முடியாதவர்கள் சமய போதனைக்கு புறப்படவே கூடாது. 'நான் சொல்லுகிறேன்-நீ நம்பு' என்று யாரையும் கேட்கவும் கூடாது; அப்படிக் கேட்டு யாரும் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இதை அனைவரும் உணர வேண்டும்."

(மிகுதிப் பகுதி அடுத்த வாரம் வெளியிடப்படும்)


'தமிழ்

G. C. E.

101 வினு விடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்தல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன.

| | |
|---|---|
| * தமிழ்ப் பாஷை | ரூ. 3-00 |
| * எண் கணிதம் | ரூ. 3-00 |
| * குடியியல் | ரூ. 3.00 |
| * சரித்திரம் | ரூ. 3-00 |
| * பூமிசாஸ்திரம் | ரூ. 3-00 |
| * சுகாதாரம் | ரூ. 3-00 |
| * ஆங்கிலம் | ரூ. 3-00 |
| * பயிற்சிச் சிங்களம் | ரூ. 3-00 |
| * றோமன் கத்தோலிக்கம் | ரூ. 3-00 |
| * இந்து சமயம் | ரூ. 3-00 |
| * இஸலாம் | ரூ. 3-00 |

பரீட்சை துணை நூல்கள்

கடந்தகால வினு விடைகள்

பரீட்சை வினுக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினுவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

| | |
|---|---|
| * தமிழ்ப் பாஷை | ரூ. 3-00 |
| * எண் கணிதம் | ரூ. 3-00 |
| * குடியியல் | ரூ. 3-00 |
| * சரித்திரம் | ரூ. 3-00 |
| * பூமிசாஸ்திரம் | ரூ. 3-00 |
| * சுகாதாரம் | ரூ. 300 |
| * ஆங்கிலம் | ரூ. 3-00 |
| * பயிற்சிச் சிங்களம் | ரூ. 3-00 |
| * றோமன் கத்தோலிக்கம் | ரூ. 3-00 |
| * இந்து சமயம் | ரூ. 3-00 |
| * இஸ்லாம் | ரூ. 3-00 |

வி. பி. பி. கிடையாது
தபாற்செலவு 35 சதம்

விபரங்கட்கு:

அற்லஸ் ஹோல்,

723 மருதானைறோட் கொழும்பு



யாழ்ப்பாணப் பெண்மணிகளுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

உலகப் பிரசித்தி பெற்ற
அரஸ்கோ தையல் மெஷினின்

ஏக விநியோகஸ்தர்களான

ஆர். அரசரத்தினம் அன்ட் கம்பனியார்

தங்கள் யாழ்ப்பாணக்கிளை ஸ்தாபனத்தில், தையல் மெஷினில் செய்யக்கூடிய எல்லா விதமான நூதன சித்திர வேலைகளையும், பெண்கள், சிறுவர் சிறுமியரின் சகல ஆடைகளையும் நவீன உயர்ந்த முறையில் வெட்டவும், தைக்கவும், சாரிகள் மேசைத் துணிகள், மற்றும் சகல பொருட்கட்கும் வர்ணந் தீட்டவும், சுவெட்டர், கால்மேஸ், தொப்பி முதலியவை கம்பளி நூலால் பின்னவும், மற்றும் சகலவித தையற் கலைகளும் மிகவும் குறைந்த கட்டணத்துடன் கற்றுக் கொடுக்கின்றனர்.

கற்றுத் தேர்ச்சியடைந்தவர்கட்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இவ்வருந்தருணத்தைப் பயன்படுத்த விரும்பும் பெண்மணிகள் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரிலாவது கடிதமூலமாவது மனுச் செய்க.

ஆர். அரசரத்தினம்

அன்ட் கம்பெனி,

43, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாகவே மாட்டேன்

எழுதியவர்: "மாலதி"

"மூக்கு நுனிவரை எண்ணெய்; மெல்லிய பழஞ் சீலைத் திரி; ஏன் நல்லாய எரியமாட்டேனென்கிறது?"

புவனாவின் சுட்டு விரல் திரியின் கழுத்தில் அழுக்கிக் கொண்டு இப்படிப்படபடத்திருக்க வேண்டும். விழி பிதுங்க நாவை வெளியே நீட்டுவதுபோல விளக்குச் சுடர் அவளின் மூக்கு நுனி வரை ஆவேசத்தோடு எழுந்து பிரகாசித்தது. அவளின் முகத்திலும் அந்தப் பிரகாசக் கீறல்கள் படிந்தன.

தாளம்பூ நிறத்துச் சந்திரன் அவள் வதனம். அங்கே தள தள வென்று மதர்த்த இரு வண்டு விழிகள். கழனித் தாமரையின் நடு இதழ் போன்ற வண்ண உதடுகள், பல் வரிசையிலே இளம் பனித் துளியின் பளபளப்பு.

* * *

புவனா வேறு யாருமல்ல, அவள் என் தங்கை—ஒன்று விட்ட தங்கை. அதாவது என் பெரியம்மாவின் மகள். எனக்கிருந்த ஒரே ஒரு தங்கை முல்லை எப்போதோ போய்விட்டாள். பிஞ்சுப் பருவத்திலேயே அந்த அழகு முல்லை உதிர்ந்து போய்விட்டாள். நான் வெறும்கொப்பு, பட்ட கொப்பு. இப்படி நான் நினைத்து விம்மிய போதுதான் என் வாழ்விலே வெதும்பிய தளிராகக் குருத்திட்டாள் புவனா. வேரொரு மரத் தளிர் இந்தப் பட்ட கொப்பிலே தழைக்க முடியுமென்பதை இயற்கையும் கோடிட்டுக் காட்டியது. நான் தடுக்கவில்லை. அந்தத் தளிர் கன்னி கட்டி இப்போது மலர்ந்தும் நிற்கிறது. அதன் கமகமத்த சொவிப்பிலே தன்னைப் பறிகொடுக்க எங்கிருந்தோ ஒரு நீல வண்டார் வரத்தான் போகிறார். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

* * *

மூடிய இமைகளைத் திறவாமலே அவளின் நடமாட்டத்தை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். காலைச் சூரியன் கதவிடுக்கினூடே என் கட்டிலோரம்வரை கதிரைச் செலுத்த முற்பட்டுவிட்ட இந்த வேளையிலும் பொய்த் தூக்கம் தூங்கிக் கொண்டிருக்கிறேன் நான். புவனா எப்போது எழுந்தாளோ தெரியாது. வைகறைக்கு முந்தியே எழுந்திருக்க வேண்டுமவள். நீராடிவிட்டாள் அவள். தோற்றமே அதைக் காட்டுகிறது முகை விரியாத மல்லிகைக் கன்னிகளை அவிழ்ந்த கூந்தலிலே அழகாகச்செருகியிருக்கிறாள். வீடு தூசில்லாது தப்புரவாகக் காட்சி தருகிறது. (எனது கட்டிலைத் தவிர) சந்தனப் புகை கமகமத்து என் நாசியெல்லாமே துழைகிறது.

ஆமாம். இன்று விவு நாள். இலாவிட்டால் இப்படிக் கட்டிலிலே இத்தனை நேரம் புரள்வேனா?

அதோ புவனாவின் முகம் தானா அது? களிப்புத் துள்ளிய அந்த வட்ட நிலாவிலே சோகக் கீறல்கள் விழுகின்றனவே! ஏன்? ஏன்?

அவள் கண்களிலிருந்து உருண்ட முத்துக்கள் கன்னங்களை வருடி வீழ்கின்றன. சோகத்தால் துடிக்கும் மார்பைக் குவிரவைக்க சேலையை நனைத்து ஊடுருவுகின்றன. அவள் ஏன் அழ வேண்டும்? தாயை நினைத்தா? தந்தையை நினைத்தா? தமையன் யாரை நினைத்தா? தன்னை நினைத்தா? இல்லை- எங்கோ இருந்த எவளோ ஒருத்தியை நினைத்துவிட்டாள். என்னை உயிருக்குயிராக நேசித்த எவளோ ஒருத்தியை நினைத்துவிட்டாள், என் மல்லிகாவை நினைத்துவிட்டாள்!

நான் வாழவில்லை. மரத்துப்போய்க் கிடக்கிறேன் மல்லிகாவின் ஆணைக்காக. நான் சாகவில்லை; பொய்க் கூடு கொண்டு புலம்பித் திரிகிறேன் புவனாவுக்காக.

ஒன்றும் புரியவில்லை உங்களுக்கு. சொல்கிறேன். சுருக்கமாகத்தான் சொல்கிறேன். சொல்லாமல் இந்தக் கட்டிலை விட்டு நான் எழுந்திருக்கப்போவதில்லை. வாருங்கள் இப்படி ஓரமாக அமர்ந்து கொள்ளுங்கள். கேளுங்கள். நான் அதிகமாகத்தான் பேசுகிறேன். வரம்பின்றித்தான் பேசுகிறேன். ஒருவேளை இது தான் எனது கடைசிப்பேச்சோ தெரியவில்லை. சொல்லட்டுமா?

* * *

இன்று சனி. அன்றும் ஒரு சனிதான். இன்று தீபாவளி. அரக்கத்தனமும் அக்கிரமமும் அழிந்த நாள். அன்றும் தீப-ஆவளி. அரக்கர்கள் மனிதர்களைக் கொன்ற நாள். அதர்மம் தர்மத்தைக் குழி தோண்டிப் புதைத்த நாள். எங்கே? இந்தப் புனித பூமியில். பொன்னான ஈழ மாமணித் திருநாட்டின் தென்கோடியில்!

வெண்கல விளக்குகளிலே நறு நெய்பெய்து வரிசை வரிசையாகத் தீபமேற்றுகிறாள் புவனா!

உயிர் போகாத மனித உடல்களிலே பெற்ரோலூற்றி கதறக் கதறத் தீக்கொளுத்தினார்களே-புனிதத் தீபமேற்றினார்களே! யார்? யாருமேதற்கு? அதிலே நானுமொருவன். உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? என்னும் முடிகிறது. ஏன்? எனக்கு இப்போது இதயமில்லை. அது மரத்துப் போய் விட்டது. கற்பாறையாகிவிட்டது.

**தீபாவளிச் சிறுகதை**

* * *

காதலை எனக்குத் தெரியாது. அன்பைத் தான் தெரியும், அதைத் தான் அள்ளிச் சொரிந்தேன் அவளுக்கு. எவளுக்கு? புவனாவுக்கு.

காதலா? அது கற்கண்டு. அதை உடைத்துச் சுவைக்க எனக்குக் கற்றுத்தந்தாள் ஒருத்தி. அவள்தான் மல்லிகா.

கல்விப் பகுதியின் சினிமா இயந்திர இயக்குநர்களில் நானும் ஒருவன். அப்போது காலியின் மூலை முடுக்குகளிலெல்லாம் எங்கள் சினிமா 'வான்' புகுந்து புறப்பட்டு வந்தது.

அந்தப் பெண் பாடசாலையிலேதான் அவளை நான் முதன்முறையாகச் சந்தித்தேன்.

"'புரஜெக்டர்' சரிந்திருக்கிறது. மேசைக் காலுக்கு ஏதாவது அடை வைக்க வேண்டுமே!" நான் ஆங்கிலத்தில் அவளைப் பார்த்துக் கூறினேன். அவள் சுற்று முற்றும் பார்த்தாள். ஒன்றுமே தென்படவில்லை. 'றெக் கோட்' பெட்டியை எடுப்பதற்காகக் குனிந்தேன். 'படார்!' என்றது. அவள் நெற்றியைத் தடவிக்கொண்டாள். "மன்னித்துவிடுங்கள்" என்றேன் நான். "தவறு என்னுடையதுதான்" என்று மெல்லச் சிரித்தாள் அவள்.

அந்த மின் காந்த அதிர்ச்சி என்னைச் சும்மா விட்டுவைக்கவில்லை. அவளையும் அது பாதித்ததென்பதைப்புரிந்து கொண்டேன்.

"விளக்குகளை அணைத்து விடச் சொல்லட்டுமா?"

"சரி" என்றேன் நான்.

படம் ஓடத் தொடங்கியது. கசமுச வென்றிருந்த அந்த மண்டபத்தில் நிசப்தம் நிலவிற்று; மௌனத்தை எல்லாம் கலைத்துக் கொண்டு 'ஸ்பீக்கர்' அலறத் தொடங்கியது.

பக்கத்திலே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் அவள் அமர்ந்து கொண்டாள்.

"மிஸ்டர்!" ............அவள் என்னை நோக்கி வாயசைப்பது தெரிந்தது. அவசரமாக 'மைக்கை' எடுத்து நீட்டினேன்.

"ஏன், ஏதாவது விளக்கம் சொல்லப் போகிறீர்களா? சொல்லுங்கள்......"

அவள் ஏதோ பேசினாள், ஒன்றும் புரியவில்லை. அவள் காதோரமாகக் குனிந்தேன்.

"உங்கள் பெயர்?...அவள் கேட்டாள்.

"சோமபாலன்...ஏன் கேட்கிறீர்கள்......"

"சோமபால இல்லைத் தானே? என் பெயர் மல்லிகா, இதோ இந்த விலாசத்தில் நாளை சந்திப்பீர்களா?" ஒரு 'விசிட்டிங்காட்டை' என் கையிலே வைத்தழுத்தினாள். "சரி" என்று தலையசைத்தேன்.

"களுக்" என்றசிரிப்பொலி. முன் வரிசையிலேயேயிருந்த மேல் வகுப்பு மாணவிகளின் சிரிப்பொலி. நிமிர்ந்தேன். அவர்கள் எங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. ஓடிக் கொண்டிருந்த படத்தைப் பார்த்துச் சிரித்திருக்கிறார்கள்.

* * *

நாங்கள் எத்தனையோ முறை சந்தித்தோம். அவள் ஒரு ஆங்கில ஆசிரியை. எத்தனையோ இரகசியங்களை நாங்கள் புரிந்து கொண்டோம். எனக்கும் ஆங்கிலம் தெரியும்.

(11-ம் பக்கம் பார்க்க)

# தென்னகத்தில் தமிழ்ப்பணி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டியது இந்த அரசாங்கத்தின் கடமையாகும்; ஆதரிப்பதற்குப் பதிலாக அம்மொழியை தடை செய்யக்கூடாது. தென் இந்தியாவில் தமிழ் பேசப்படுவதனால் எமக்குத் தேவையான கலைச் சொற்களை அங்கிருந்து பெறலாமெனச் சொல்லுதல் நியாயமாகாது. அதுவே உங்கள் நியாயமாயின் நீங்கள் பெரும் நீதியீனமானவர்கள். தென் இந்தியாவில் வழங்கப்படும் சொற்கள் அத்தனையும் அல்லது அங்குள்ள மொழிநடை அப்படியே எமது சொற்றொகுதிகளுக்குப் பயன்படமாட்டா வென்பதைக் காட்டுவதற்காகவே இந்த ஆசிரியத் தலையங்கம்பற்றிக் குறிப்பிட்டேன்.

## நுண் தொழிற் கல்வி விஞ்ஞானக் கல்வி

அதே தலையங்கத்திலிருந்து மற்றுமொரு பந்தியை நான் வாசித்துக் காட்டுதல் வேண்டும்:

"வேறு பல விடயங்கள், முக்கியமாக நாட்டின் கைத்தொழில், பொருளாதாரம் சம்பந்தமானவை, பாராளுமன்றத்திலும் நாட்டிலும் அவசியம் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. இவ்விடயங்கள் ஒருவாறு கவனிக்கப்பட்ட பின் எமது அரசாங்க மொழிபற்றி அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை ஆராயலாம்"

பொருளாதார கைத்தொழிற் துறைகளில், முக்கியமாக நுண் தொழிற் கல்வி விஞ்ஞானக் கல்வி முதலியனவற்றில் நூல்கள், பாடப் புத்தகங்கள், கலைச் சொற்றொகுதிகள், பாடசாலைகள் ஆதியன எம்மாணவருக்கு அவசியம் வேண்டுமென [illegible] தேன். இவற்றை தக்கபடி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தைப் புகுத்துவதிற் காலம் செலவழிக்கக் கூடாது அரசாங்கம் விஞ்ஞானம், நுண் தொழில் ஆகியவற்றிற்காய தமிழ்க் கலைச் சொற்களைத் தாமதமின்றித் தயாரிக்க வேண்டுமெனவும் அக்கருமத்திற்குத் தேவையான பணியாளரை உடனே நியமிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இவற்றை நீங்கள் செய்யாது தட்டிக்கழிப்பதற்கு ஒரு நியாயமுமில்லை.

## ஆங்கிலம்

"இந்துப்" பத்திரிகையின் தலையங்கத்திலுள்ள கடைசி பந்தியையும் வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

"என்னதான் நிகழ்ந்தபோதிலும், உத்தியோக நோக்கங்களுக்குத் தேவையான காலம்வரை, ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும்; அத்துடன் எமது கல்வித் தாபனங்களில் ஆங்கிலம் ஒரு முக்கிய பாடமாகவும் இருத்தல் வேண்டும்"

ஆங்கிலத்தை, அது இப்பொழுது வகிக்கும் நிலையில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமாயினும் காரியமில்லை. தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு வேண்டிய உறுதியான அத்திவாரத்தை இடுங்கள்; பாடப் புத்தகங்கள், தகுதியான நூல்கள் ஆகியவற்றை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யுங்கள். இவ்வகையான முக்கிய வேலைகளில் நீங்கள் கவனம் செலுத்தவேண்டுமேயன்றி நாடு முழுவதிலும் சிங்களத்தைப் புகுத்தி உங்கள் அரசாங்க மொழித் திட்டத்தை அவசரமாக நிறைவேற்றுவதிற் காலம் செலவழித்தல் புத்தியாகாது.

## அரசாங்க மொழித் திணைக்களம்

அரசாங்க மொழித்திணைக்களத்தின்கீழுள்ள மானியங்கள் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சென்ற மூன்று வருடகாலமாக இத் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவு எவ்வளவு தூரம் ஒடுக்கப்பட்டிருக்கிறது என்பதை காட்டுவதற்காகச் சில விபரங்களைத் தருகிறேன். அதற்குமுன்னர் மற்றுமொரு விடயத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விசேட கமிஷனரின் ஒப்பந்த காலம் ஒக்டோபர் முதலாந் தேதியுடன் முடிகிறது என நம்புகிறேன்.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: செப்டம்பர் முடிவில்.

திரு. வன்னியசிங்கம்: செப்டம்பர் முடிவில் இந்த உத்தியோகத்தரின் நிலை என்னவென்பதையும், அவருக்குப் பதிலாக வேறெவரையாயினும் நியமிக்கும் உத்தேசம் பிரதமருக்கு உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன். இந்த விசேட கமிஷனர் பற்றி பல்கலைக் கழகக் கமிஷன் நியமனத் தொடர்பில் நான் பல கேள்விகள் கேட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.


## விசேட கமிஷனரின் உள்ளம்

கல்வித் துறையிற் கூடத் தமிழர் நிலை பற்றிய இவருடைய மனப்பான்மையைப் பலரும் அறிவர். நாட்டிலுள்ள பல்வேறு இன மக்களின் தொகை வகுப்பு விகிதப்படியே பல்கலைக் கழகத்தில் மாணவரைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும் எனச் சிபார்சு செய்தவர்க

(15-ம் பக்கம் பார்க்க)


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே





- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சித்த சுவாதீனமற்றவர்கள்

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக்குழு சட்ட ஆலோசகர்

பாலியர்கள் போலவே சித்த சுவாதீனமற்றவர்களும் சட்டக் கடமைகளுக்கும் உரிமைகளுக்கும் ஓரளவில் அப்பாற்பட்டவர்கள் ஆவர் சித்த சுவாதீனமற்றவர்கள் தங்கள் நலனையும் ஆதனங்களையும் தங்கள் வாழ்க்கையையும் சரிவரக் கவனிக்க முடியாதவர்கள்; ஆகையால் அவர்கள் இன்னொருவரின் பராமரிப்பில் இருக்க வேண்டியவர்களாகின்றார்கள்.

சித்த சுவாதீனமற்றவர்கள் அந் நிலையிலிருக்கும்கால் ஒரு அபராதக் குற்றத்தை (Crime) புரிந்தால் அவர்கள் அதற்குரிய தண்டனைக்குட்படமாட்டார்கள். ஆனால் கொலை போன்ற பாரிய குற்றம் செய்தால் அவர்களை நீதிமன்றம் அவர்கள் குணமடையுமட்டும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கும்.

## ஒப்பந்த விலக்கு

அதுபோலவே அவர்கள் சுவாதீனமற்ற நிலையில் ஒரு ஒப்பந்தம் (Contract) அல்லது வேறு சட்ட ரீதியான அலுவல்களில் (Legitimate Transactions) ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் அவற்றை விலக்க முடியும். ஆனால் அச் சந்தர்ப்பத்தில் தாம் என்ன செய்தோம் என்பதை உணர முடியாதபடி சித்த சுவாதீனமற்ற நிலையிலிருந்ததாக அத்தாட்சி பண்ண வேண்டும். அல்லது, அவர்களை நீதிமன்றம் ஏற்கனவே சித்த சுவாதீனமற்றவர்களெனத் தீர்ப்புக் கொடுத்திருக்க வேண்டும்.

## அத்தாட்சி வேண்டும்

இனி ஒருவர் சித்த சுவாதீனமற்றவரென எப்படித் தீர்ப்புப் பெறலாமென்பதை யாராய்வோம். 1873-ம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்படி பின்வரும் பிரமாணங்கள் கையாளப்பட வேண்டும். ஒருவர் சித்த சுவாதீனமற்ற நிலையிலிருக்கிறாரென்று ஒரு கிராமாதிகாரி அல்லது பாதுகாப்பு உத்தியோகஸ்தர் (Police Officer) அல்லது ஒரு தனிப்பட்ட நபர் அப்படியானவர் வசிக்குமிடத்தைச் சேர்ந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு அவரது மூளையின் நிலையை விசாரிக்கும்படி எழுத்து மூலம் மனுப்பண்ண வேண்டும். இம்மனு சத்தியப் பிட்டிசம் மூலம் தாக்கல் பண்ணப்பட வேண்டும்.

## தனிப்பட்டவர் மனு

தனிப்பட்ட நபர் மனுப் பண்ணுவதாயின் இம் மனுவுடன் ஒரு வைத்திய கல்லூரித் தராதரம் பெற்ற வைத்தியரின் தராதரப்பத்திரமும் இணைக்க வேண்டும். அத் தராதரப்பத்திரத்தில் வைத்தியர் தாம் மேற்படி நபரைப் பார்வையில் வைத்திருந்ததாகவும் தன் அபிப்பிராயப்படி அந்த நபர் மூளைக்கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கிறாரெனவும் கூற வேண்டும்.

இம் மனு கிடைத்தவுடன் நீதிமன்றம் சந்தேகத்துக்கு உரிய அந்த நபரை நீதிமன்றத்துக்கு வரச் செய்து அவரையும் வேறு சாட்சியங்களையும் விசாரணை செய்து அன்னாரின் மூளையின் நிலையைத் தீர்மானிக்கும். அவ் விசாரணையின் பலனாக அவரின் மூளையின் நிலை சரியில்லையென உணர்ந்தால் அவர் சித்த சுவாதீனமற்றவரெனும் தீர்ப்பைப் பிறப்பிக்கும்.

## தீர்ப்பு

இத் தீர்ப்பிலிருந்தும் உயர் நீதிமன்றத்துக்கு நடுக்கேள் (Appeal) செய்ய முடியும். இதைச் சந்தேகத்துக்கு உரியவர் அல்லது அன்னாரின் உறவினர் அல்லது நண்பர் அல்லது அரசாங்க நியாய துரந்தரர் (Crown Counsel) அல்லது பாதுகாப்பதிபர் (I. G. P.) அல்லது காவற் (மறியல்) கூட அதிபர் (Inspector General of Prisons) அல்லது சுகாதாரப் பகுதியதிபர் அல்லது மூளைக்கோளாறு இருப்பதாகத் தராதரப் பத்திரம் வழங்கிய வைத்தியர் மனுப்பண்ணலாம். உயர் நீதிமன்றம் நடுக்கேளை விசாரித்துத் தீர்ப்புக் கொடுக்கும் அத் தீர்ப்பை மாவட்ட நீதிமன்றம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

## பரிசீலனை

மாவட்ட நீதிமன்றம் தீர்ப்புக்கு வருமுன் சந்தேகத்துக்கு உரியவரை மூளைக் கோளாறை பரிசோதிக்கும் வீடுநிக்கு (Home of Observation) அனுப்பிவைக்கலாம். நீதிமன்றம் அவருக்கு மூளைக் கோளாறில்லையென உணர்ந்தபோதிலும் இரு வைத்தியர்கள் எதிரான அபிப்பிராய தராதரப் பத்திரம் வழங்கியிருந்தால் தீர்ப்புக்கு வருமுன் கட்டாயம் மேற்படி விடுதிக்கு குறிக்கப்பட்ட காலத்துக்கு பரிசீலனைக்காக அந்த நபரை அனுப்பிவைக்க வேண்டும். அக் கால எல்லை முடிந்தவுடன் பழையபடி விசாரணையை ஆரம்பித்து இன்னும் மேலதிக சாட்சியம் மூலம் தெளிவுபெற்று அவே சித்த சுவாதீனமுள்ளவரார் அற்றவரோ என்னும் தீர்ப்பையடைய வேண்டும்.

சித்தசுவாதீனமற்றவரெனத் தீர்ப்புக்கு வந்தால் அன்னாரை தேசாதிபதி விரும்பும் கால எல்லை மட்டும் காவலில் வைத்திருக்கும்படி உத்தரவிடலாம். ஆனால் அன்னாரின் உறவினர் அல்லது நண்பர் ஒருவர் அவரை முறையாகப் பராமரிப்பதாகவும் காவலில் வைத்திருப்பதாகவும் ஏற்று அதற்குப் போதிய பிணை கொடுத்தால் அவரின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் அவ்வாளை நீதிமன்றம் விட உரித்துண்டு.

## காவல்

அப்பேர்ப்பட்ட ஒருவர் கிடையாவிடின் தேசாதிபதியின் விருப்பமறியுமட்டும் காவலில் அவரை வைக்க வேண்டும். தேசாதிபதி தன் கட்டளை மூலம் அப்பேர்ப்பட்டவரை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் பாரப்படுத்துவார். இதைவிட பராமரிப்புக்கு எடுத்த உறவினரோ அல்லது நண்பரோ பராமரிக்க முடியாவிடில் பழையபடி நீதிமன்றத்துக்கு ஆளைப் பாரப்படுத்தலாம்; அச் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் பழையபடி தேசாதிபதியின் விருப்பமறியுமட்டும் காவலுக்கு விட வேண்டும்.

இதைவிட நீதிமன்றத்துக்குப் போகாமலே ஒருவரை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் பாரப்படுத்தலாம்; அதாவது சித்த சுவாதீனமற்றவரின் பராமரிப்புக்காரர் அல்லது உறவினர் அல்லது நண்பர் தேசாதிபதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். அன்னாரை ஆஸ்பத்திரியில் வைத்துப் பராமரிப்பதால் ஏற்படும் சகல செலவுகளுக்கும் பொறுப்பாயிருப்பதற்குத் தாம் பிணை கொடுக்கத் தயாரெனவும், அன்னாரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனால் அவ்வாஸ்பத்திரி மேற்பார்வையாளர் அன்னாரை யேற்று இரு வைத்தியர்களைக் கொண்டு அவரின் மூளை நிலையைப் பரிசோதிக்க வேண்டுமென தேசாதிபதி யுத்தரவிட வேண்டுமெனவும் விண்ணப்பத்தில் கூற வேண்டும்.

## தேசாதிபதி தலையீடு

விண்ணப்பம் கிடைத்தவுடன் தேசாதிபதி விண்ணப்பத்தை நிறைவேற்றும்படி பைத்தியக்கார ஆஸ்பத்திரி மேற்பார்வையாளருக்கு அறிக்கை விடுவார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமுன் உறவினர் அல்லது நண்பர் தேசாதிபதியால் குறிக்கப்பட்ட தொகைக்கு பிணையுறுதி எழுதிக் கொடுக்க வேண்டும். அதாவது நோயாளரின் நாளாந்த செலவுக்கு தேவையான பணத்தைச் செலுத்துவதாகவும், நோயாளி குணமடைந்துவிட்டாரென அறிவித்தல் கொடுத்துப் பதினொன்கு நாட்களுக்கிடையில் அன்னாரை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்துப்போவதாகவும் பிணைகொடுக்க வேண்டும். அப் பிணை கொடுபட்டவுடன் சித்தசுவாதீனமற்றவர் ஆஸ்பத்திரியில் ஏற்றுக் கொள்ளப்படுவார்.

(13-ம் பக்கம் பார்க்க)

# சாகவே மாட்டேன்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'மல்லிகா' இரு சமூகத்துக்கும் பொதுவான பெயர் ஆனால் அவள் சுத்தத் தமிழச்சி.

எனக்கு அந்தப் பாஷை மிதமிஞ்சிச் சரளமாகவரும். சில இடங்களில்—ஏன் காலி முழுக்க நான் பாலனிலிருந்து 'பாலா'வாக மாறி வளையவந்தேன்.

அந்தச் சமூகத்து புதுமை குலையாத 'சிஞ...குட்டி'கள் என்னை விழுங்கி விடுவது போல் பார்ப்பார்கள். சந்தர்ப்பம் வாய்த்தால் அந்த முல்லை முகைகளால் இடித்துத் தள்ளிச் சென்று திரும்பிப் பார்ப்பார்கள். நானும் மனிதன் தான். அதுவும் ஒரு வாலிபன். உணர்ச்சிகள் இல்லாமலா போகும்? பொழுது போக்குக்காக அவர்களுடன் ......இல்லை அந்த இறுதி வேளைகளிலே மல்லிகா தடுத்து நிறுத்துவாள். என் இதயத்திலிருந்து அவள் நழுவியிருந்தால் நான் எப்போதோ பொழுதுபோக்குக்காக புதுமை நாகரிகத்தில் குதித்திருப்பேன். அந்த பரீட்சையிலே கடைசி வரை நான் இறங்கத்தானில்லை.

அவளை—யாரை? மல்லிகாவை தொடக்கத்திலே அந்தக் 'குட்டி'களோடுதான் எடைபிட்டேன். ஆனால் அவள் புடம் போட்ட தங்கம். போகப் போகத்தான் புரிய முடிந்தது.

அவள் புதுமை குலையாதவள். பொன்னான உள்ளம் படைத்தவள். ஆயிரம் வருடம் தவமிருந்தாலும் அவள் பெறுதற்கரியவள். அத்தனை நல்லவள் என் மல்லிகா அவளை இதற்குமேல் வர்ணிக்க என்னால் ஆகாது. வீணே வார்த்தைகளை வளர்க்க மாட்டேன். அவள் இணையற்றவள் எனக்குக் கிடைத்தாள். எனக்குத்தான் கிடைத்தாள். இறுமாந்து கிடந்தேன்.

* * *

அன்றும் இதே நாள். இதே வேளை. பொழுது இன்னும் சரியாகப் புலரவில்லை.

'டக்......டக்...டக்...டக்...' கதவை யாரோ தட்டினார்கள். நடுங்கிய கரங்களால் கதவை மெள்ளத் திறந்தான் புவனு. பீதியால் உடல் சுருங்க பூனைபோல் நுழைந்தாள் மல்லிகா. நான் பதைபதைத்துப்போய் அவளை நெருங்கினேன். திரும்பி கதவைத் தாளிட்டுவிட்டு முதுகுப்புறமாக அதிலேசாய்ந்து கொண்டு மூச்சு வாங்கினாள்.

சேலை கசங்கியிருந்தது. கூந்தல் கலைந்திருந்தது. செந்தாளம் பூ நிற மேனி எங்கும் மிருக நகங்கள் கோடுபோட்டிருந்தன. சோகத்தில் தோய்ந்த சிலையாக அவள் நின்றாள்.

எனது புயங்கள் படபடத்தன. இரத்தம் கொதித்தது. ஆவேசம் பொங்கியது.

"என்ன நடந்தது? சொல் மல்லிகா. என் ரத்தம் கொதிக்கிறது. நான் செத்துவிடுவேன், மல்லிகா"—நான் சத்தினேன். அந்த வதனத்தை உற்று நோக்கினேன்.

"பாலு!"......அவள் கதறினாள் "நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. நான் சாக வேண்டியவள்" நிதானமாக என் முகத்தையும், புவனுவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"எனக்கொரு வாக்குறுதி தாருங்கள்"—என் உள்ளத்தை ஊடுருவின அவளது வார்த்தைகள். அவள் கரங்களைப் பற்ற முயன்றேன். அவள் அதை விரும்பவில்லை.

"என்ன?"...தாளாத துயரத்திலே நான் தவித்தேன்.

"கடைசிவரை என் வார்த்தைகளை நீங்கள் கேட்க வேண்டும்."

"கேட்கிறேன், சத்தியமா[illegible]! எதையும் யோசிக்காமலே கூறிவிட்டேன்!

(13-ம் பக்கம் பார்க்க)

வழுக்கை விழுகின்றதா.....?
அப்படியானால் உடனே
"ஹேர்பிரேனல்"
உபயோகியுங்கள்.
இந்த அற்புத தயாரிப்பு
★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.
★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.
இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தருந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.
42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிரூபணமானது. இந்த ஆச்சரியமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.
"ஹேர்பிரேனல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப் போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.
சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-
சிர்ருல் கதீர் அன் கம்பெனி,
41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஷயம் சீரியஸ். இனிச் சிந்தித்துப் பயனில்லை. 'பாக்கிய தேவதை' படத்தில் நம்பியாரும் சாவித்திரியும்.

பட விமர்சனம்:

# பாக்கிய தேவதை

பாக்கியதேவதை—கதையில் புதுமையில்லாவிட்டாலும் சுவாரஸ்யமான சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. கோவையான கதைப்போக்கு வேறு.

தந்தையின் வாக்கைக் காப்பாற்றத் தவறுகிறுள் லலிதா. அவள் தங்கை பாக்கியசாலியாகிருள். அதனுல் பாக்கியதேவதை என்ற நல்ல பெயரையும் தேடிக்கொள்ளுகிருள்.

பாக்கியதேவதை சரளாவாக சாவித்திரி நடிக்கிருர். நெருக்கடியான கட்டங்களில் சோடை போகாமல் நடித்துள்ளார். அழும்போது உதட்டைக் கடித்துக்கொள்வது சாவித்திரியின் நடிப்புக்கு மெருகேற்றுகிறது.

கதாநாயகன் ஜெமினி கணேசன். அவருக்குப் பொருத்தமான பாத்திரம். டாக்டராக சூட்டுடனும்கோட்டுடனும் வந்து உள்ளத்தைக் கவர்ந்துவிடுகிருர். கச்சிதமான நடிப்பு.

அவர் மனைவி லலிதா சொல்லாமல் வீட்டைவிட்டு போய்விடுகிருள். அவருக்கு மனநோய் பீடிக்கிறது. அந்த கட்டங்களில் கணேசனின் நடிப்பு மறக்க முடியாதது.

லலிதாவாக ராஜசுலோசனு நடிக்கிருர். நாகரிகப் பெண் பாத்திரம் அவருக்குப் பொருத்தமானதும் பழக்கப்பட்டதுமாகும். ஆனுல் மாறுவேடத்தில் டாக்டராக நடிக்கும்போது தன் கணவனுக்கே சேவை செய்யும்போது—துயரத்தால் அவர் கண்கலங்கும் நிலை அபாரம்.

சரளாவைக் கொடுமைப் படுத்தும் மாமியாராக நடிக்கும் பாக்கியம் ரசிகர்களின் திட்டுதலுக்கு ஆளாகும் அளவுக்கு சிறப்பாக நடித்துள்ளார். வில்லனுக நம்பியார் வருகிருர்.

நடனங்களும் பாடல்களும் அவசியமில்லாமல் சில இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்படி ஒரு சில குறைபாடுகள் இருந்தபோதிலும் பார்த்து அனுபவிக்கக் கூடிய படம் பாக்கியதேவதை என்பதில் சந்தேகமில்லை.

—சபா

## இன்பக் கனவு நாடக விருந்து

தமிழகத்தில் பலராலும் போற்றப்படுவதோடு அதிக வசூலையும் கொடுக்கும் நாடகங்களுள் எம். ஜி. ஆர். தயாரித்து நடித்து வரும் 'இன்பக் கனவு'ம் ஒன்ருகும்.

இந்த நாடகத்தை அப்படியே நடித்துக் காட்ட இருக்கிருர்கள் இலங்கை தேசிய கலை அரங்கத்தார். தீபாவளி விருந்தாக 31-10-59 சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்நாடகம் நடைபெறவிருக்கிறது.

நாடகத்தின் சிறப்பு குறித்து, அநேகர் திரளக் கூடிய மக்கள் அந்தளவு பெருக்கும் அதைக் கண்டு களிக்கும் சந்தர்ப்பம் அளிக்குமுகமாக சனிக்கிழமை இரண்டு காட்சிகள்—அதாவது மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும்—நடத்த இருப்பதாக தயாரிப்பாளர் திரு என். எஸ். சிவலிங்கம் சுதந்திரனுக்கு அறிவித்திருக்கிருர்.

'இன்பக் கனவு' நாடகத்தில் அனுபவமுள்ள கலைஞர்கள் பலர் நடிக்கிருர்கள் என்பதும் இந்நாடகம் முன்னரே அரங்கேற்றப்பட்டு பலரின் ஆதரவையும் பெற்ற ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

## குஸ்தி வீரர் பாலையா!

வில்லன் பாலையா திடீரென்று குஸ்தி வீரராக மாறிவிட்டார். நடந்தது இதுதான்:

மல்யுத்தம் பார்ப்பதற்காகப் பாலையாவும், சி. கே. சரஸ்வதியும் போனுர்கள். மல்யுத்தம் பார்க்கப்போன இடத்தில் பாலையாவுக்கும் மற்றொருவருக்கும் சண்டை நடந்துவிட்டது! அந்த மற்ருெருவர் யார் தெரியுமா? கிங்காங்! ஆமாம் கிங்காங் தான்!

பாலையாவுக்குச் சரியான அடி! ஆகவே, அடிபட்ட பாலையாவை வீட்டிற்குக் கொண்டுபோய் படுக்கப் போட்டார்கள்.

அப்பொழுது அங்கே வந்த மகனும், வேலைக்காரனும் (குலதெய்வம் ராஜகோபால்) அடிபட்ட பாலையாவைக் கிண்டல் செய்தார்கள்.

விஜயா ஸ்டுடியோவில் இந்தச் சம்பவம் நடந்தது. அதாவது அசோஷியேட்டட் புரொடக்ஷன்ஸ் நிர். 7 படப்பிடிப்புக்காக இந்தக் குஸ்தி நடந்தது.

இந்தக் காட்சியை டைரக்டர் யோகானந்த் நல்ல நகைச்சுவை ததும்ப டைரக்ட் செய்தார். இந்தப் படத்தில் இவர்கள் தவிர அஞ்சலிதேவி, நாகேஸ்வரராவ் முதலானேர்களும் நடிக்கின்றனர். இதனுடைய கதை, வசனத்தை முரசொலி மாறனும், இசையை கே. வி. மகாதேவனும் அற்புதமாக அமைத்திருக்கின்றனர்.

## கட்டபொம்மன் இசைத் தட்டு

### சிவாஜியின் மானத்தை வாங்குகிறது

கட்டபொம்மன் படம் வெட்டிக் கொத்தி ஆறு இசைத்தட்டுகளில் பதித்து சலையாக முப்பது ரூபாவுக்கு விற்கப்படுகிறதல்லவா!

இதால் சிம்மக் குரலோன் சிவாஜிக்கு தீராத அவமானம். இசைத்தட்டுகளைப் பணங்கொடுத்து வாங்குபவர்களுக்கு பெரு நஷ்டம்.

மனோகரா, திரும்பிப்பார், முதலான படங்களும், அனார்க்கலி, சாம்ராட் அசோகன், சாகிரட்டீஸ் போன்ற நாடகங்களும் இசைத் தட்டுகளில் சிறப்பாக வந்து சிவாஜியின் புகழைப் பன்மடங்காக்கின. ஆனுல் கட்டபொம்மன் இசைத் தட்டுகள் அதைத் தரைமட்டமாக்குகின்றன.



படத்தில் கேட்கும் சிவாஜியின் சிம்மக்குரல் இசைத் தட்டுகளில் இல்லை, 'சினுங்கல்' தான் கேட்கிறது. படம் முழுவதையும் ஆறு இசைத் தட்டுகளில் அடக்கவேண்டும் என்பதற்காக "ராக்கெட்" வேகத்தில் பேச்சும் பாட்டும் வரும்படியாக இசைத்தட்டுகளில் ஒலியைப் பதிவு செய்திருக்கிருர்கள். அது தான் போகட்டும். படத்து உரையாடலாவது தொடர்ச்சி சிதைவுருமல் பொருத்தமறிந்து இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? கிடையாது. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கப்பட்ட வசனங்களைக் கேட்டால் ஒன்றுமே புரிவதாயில்லை. நல்ல வசனங்கள் பலவற்றைக் கேட்கவே முடியவில்லை.

பாட்டுகளிலும் படுகொலை முயற்சிதான். அருமையான பாடல்கள் வரி ஒன்று இரண்டோடு நிறுத்தப்பட்டு விட்டன. இசைத் தட்டுகளைப் பணங் கொடுத்து வாங்கினுல் வயிற்றெரிச்சலை வலுவில் வாங்கியமாதிரி இருக்கிறது. இப்படி கட்டபொம்மன் படத்தை இசைத் தட்டுகளில் கொண்டுவந்த புண்ணியாத்துமாக்கள் கொலம்பியா ஸ்தாபனத்தாராவர். அவர்கள் இசைத் தட்டுகளைப் பணங்கொடுத்து வாங்குபவர்களுக்கு மட்டுமல்ல, சிவாஜியின் மானத்தை மேற்படி தட்டுகள் மூலம் [illegible] வேண்டும்.



கடந்த காலத்தை நினைத்துக் கலங்குகிருர்கள் இருவரும். பானுமதியின் காலடியில் மகாலிங்கம்! 'மணிமேகலை' படத்தில் வருகிறது இந்தக் கட்டம்.

## நடிப்பில் காப்பியடிப்பு

நடிகர் ஒருவர் இன்னெரு நடிகரைக் காப்பி அடிப்பது கூடாது அதனுல் காப்பி அடிப்பவருக்கு எதுவித லாபமும் இல்லை. மாருக அவர் ரசிகர்களின் வெறுப்புக்குத்தான் ஆளாவார்" என்று நடிகர் சகஸ்ரநாமம் கூறினுர்.

"இப்படி இருவர் காப்பி அடிப்பதனுல், யாரைக் காப்பி அடிக்கிருரோ அந்த நடிகருக்குத்தான் இவர் இன்னும் புகழ் தேடிக் கொடுக்கிருர் என்றும் திரு. சகஸ்ரநாமம் சொன்னுர்.



ஜோடிப் பொருத்தம் எப்படி? 'மாமியார் மெச்சிய மருமகள்' படத்தில் எம். என். ராஜமும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனும்.

பட விமர்சனம்:

# மாமியார் மெச்சிய மருமகள்

ஆச்சரியம், ஆனுல் உண்மை. மருமகளை மாமியார் மெச்சுகிருர். எம். என். ராஜத்தை ஜி. வரலட்சுமி வாயார வாழ்த்துகிருர். வாழ்த்துவது மட்டுமல்ல மருமகளுக்கு கூந்தல் முடித்து அலங்காரம் செய்து அழகு பார்த்து மகிழ்ந்தும் கொள்கிருர்.

### எளிமையும் நகைச் சுவையும்

இத்தகைய அமைப்பில் படத்தை உருவாக்கியவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். கருத்து வழமைக்கு மாருனது என்பதற்காக மட்டுமல்ல பாராட்டு. புதுக் கருத்தை மனதில் நன்கு பதிக்கக்கூடிய மாதிரியும் படம் எடுத்திருக்கிருர்கள்.

படத்தில் எளிமை காண்கிறது; இலகுவாகக் கதை வளர்கிறது; நகைச்சுவை அடிக்கடி தவழ்ந்து வருகிறது. ஆரம்பக் கட்டங்களில் கதையமைப்பில் சிறிது மாற்றம் செய்து அவற்றையும் எளிமையாக்கியிருந்தால் "மாமியார் மெச்சிய மருமக"ளை ஒரு நகைச்சுவைப் படம் என்றே சொல்லிவிடலாம்.

### நடிப்பு

பிள்ளைப் பாசம் மிக்கபெரியம்மாவாக ஜி. வரலட்சுமி வருகிருர். பொருத்தமான இந்தப் பாத்திரத்தில் சக்கைபோடுபோடுகிருர். பேச்சும் ஒரு தினுசு; பார்வையும் ஒரு தினுசு. அப்படியே மனதை ஈர்க்கிருர்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனும் எம். என். ராஜமும் கணவன்—மனைவி. பிறர் குழந்தையை வைத்துக்கொண்டு வரலட்சுமியின் சொத்துக்காகப் பிழைப்பு நடத்துகிருர்கள். விதவிதமான நாடகங்கள் நடத்துகிருர்கள். அந்த நாடகங்கள் அவர்கள் முதுகுக்கே சில கட்டங்களில் நட்டம் விளைவித்து விடுகின்றன. அவற்றைப் பார்ப்பவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். தாம்பரம் லலிதா கணவன்—மனைவிக்கிடையில் தன் குழந்தையோடு குறுக்கிடும் கட்டங்கள் மிகக் கச்சிதம்.

கதை வசனம் கலைதாசன். டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு. இரண்டும் பரவாயில்லை பாடல்களும் சுமாராகவிருக்கின்றன.

### நடனம்

சாயி சுப்புலட்சுமியின் நடனம் ஒன்றும் படத்தில் இடம் பெற்றிருக்கிறது. அற்புதமாக ஆடுகிருர்கள். ஆனுல் அதை நன்கு அனுபவிக்க முடியாமல் தடுக்கிறது பின்னுல் உள்ள காட்சி அமைப்பு. சிறைச்சாலைச் சுவர் மாதிரிக் கட்டம் பிரித்த கிருதிச் சட்டமறைப்பு கண்களை உறுத்துகிறது. ஆடலை விழுங்கிவிடுகிறது. மற்றப்படி படப்பிடிப்பு மிக நன்ருக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகவே மாட்டேன்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

புவனாவை அவள் பர பர வென்று உள்ளே இழுத்துச் சென்ற மூன்று நிமிடங்களும் நான் மரத்துப் போய் நின்றிருந்தேன். கதவிலே அடிந்தார்கள்! பேய்க் கூச்சலும் கூத்தும் ரோட்டைப் பிளந்தன.

அவன் புவனாவை மீண்டும் இழுத்து வந்தான்; அவள் உடை 'காலி குட்டி'கள் அணியும் பாஷனிலே மாறி இருந்தது.

"புவனாதான் இப்போது மல்லிகா. அவள் பேசாத ஊமை. என் ஆத்மா சாட்சியாக கடைசி வரை நீங்கள் தமிழில் பேசக் கூடாது." அவள் கூறி விட்டு கதவை நோக்கித் தாவினாள்.

'கடைசிவரை! எந்தக் கடைசிவரை?' கேட்க ஒரு நொடி கூட மிஞ்சவில்லை' என் உடலெல்லாம் நார் நாராக, பிய்த்தெறியப் பட்டது போன்ற ஒரு கொதிப்பு.

"மல்லிகா!"... அவளை நோக்கித் தாவினேன். "கதவைத் திறவாதே! கதவைத் திறவாதே!"—என் அலறல் காதில் விழு முன்னரே கதவு 'படீ'ரென்று திறந்து கொண்டது.

திமு திமு வென்று ஒரு கும்பல்! அத்தனையும் ஆண் ஜென்மங்கள், அவர்களையும் ஒரு அம்மாதான் பெற்றாள்.

அவர்கள் மத்தியிலே அவள்!—அவள் தான் என் மல்லிகா!

நான் மலையாக அல்ல; சிலையாக அல்ல; மரமாக-மரமாக நின்றிருந்தேன்.

நான் காணாது ஏற்கனவே நடந்துவிட்ட ஒன்று, என் கண் முன்னே—நடு வீதியிலே என் மல்லிகாவுக்கு நடந்து கொண்டிருந்தது.

ஐயோ! மல்லிகா!.........

ஆயிரம் காட்டு யானைகளுக்கு ஒரு அழகுரோஜா அடங்குமா? அது தூசு தூசாகிக் காற்றோடு கலந்து விடுமே!

ஆம் இந்த மல்லிகையும் காற்றோடு கலக்கத் தான் காத்திருந்தது. அது என் கைபட்டா நடக்க வேண்டும்?

அவள் பிணமானாள்.-என் மல்லிகா பிணமாகிவிட்டாள். இல்லை. அவள் உடலிலே உயிர் ஒட்டிக் கொண்டிருந்தது!

அவள் உடலை விட்டுச் சென்ற அந்தக் கூட்டம் மீண்டும் திரும்பிவந்தது. என் பக்கம் திரும்பியது.

"யார் நீ? ஏன் இவளுக்கு இடமளித்தாய்? எங்கள் குலத்தலனாயிருந்தும் இந்த வேற்றாளுக்கு இடமளித்தாயே. வா இங்கே! யார் இவள்?" புவனாவைச் சுட்டிக் காட்டி அந்தத் 'தேவ' பாஷையிலேவினவியது கும்பல். அதே மொழியிலே நிதானமாகப் பேசினேன்.

"மல்லிகா! என் தங்கை!"

அவர்கள் குதித்தார்கள். என்னையும் வீதிக்கு இழுத்துச் சென்றார்கள்.

"இவனும் அவளைச் சேர்ந்தவன் தான்! பேசச் சொல்லுங்கள்," பின்னுக்கு யாரோ கதிறுைர்கள்.

"இல்லை அவள் ஊமை. மல்லிகா ஊமை!" நான் கத்தினேன்.

என் கையிலே யாரோ 'பெற்ரோல் டின்னை'க் கொடுத்துப் பிடரியிலே பிடித்துத் தள்ளினார்கள்.

"ம், ஊற்று பெற்ரோலை." கும்பல் வலைத்துக் கொண்டு குதித்தது.

தரையை நோக்கினேன் என் இதயத்தே குடியிருந்தவள்—என் மல்லிகாவின் உடலா அது? அந்த முகத்தை நோக்கினேன். இரத்தக் கறை படிந்த அவள் கண்களை நோக்கினேன். இமைகள் அசைந்தன. கண் திறந்தது. கவலை தீர்ந்த பார்வை என் இதயத்தைத் தின்றது.

"கவலைப்படாதீர்கள், என் கடமை முடிந்து விட்டது"-அந்தக் கண்கள் கூறின, என் கண்களைப் பார்த்து. அவள் முறுவலித்தாள். முறுவலா அது? இமைகள் தாமாக மூடிக் கொண்டன. அந்த வதனத்திலே சாந்தி தவழ்ந்தது. அவள் போய்விட்டாள்.

"ஊற்றடா பெற்ரோலை"

பிடரியிலே 'மடார்' என்றது. இடறி விழ்ந்தேன். யாரோ பெற்ரோலை ஊற்றினார்கள். எங்கிருந்தோ இன்னும் ஐந்தாறு உடல்களை வரிசையாகக் கொண்டு போட்டார்கள். தீப்பெட்டி என் கையிலே திணிக்கப்பட்டது.

கண்கள் இருண்டன, கால்கள் இடறின அதன் பின்... அதன் பின் தான்

வரிசையாக அவை எரிந்து தானிருக்கும். அவையும் தீப வரிசைதானே!

இன்று-நாட்கள் போய், மாதங்களும் போய் வருடன்களும் போகப் போகின்றன,

எனக்காக-என் தங்கைக்காக, எவளோ ஒருத்தி-இல்லை என் இதயத்தைக் கொள்ளை கொண்ட அவள்-அவள் தான் என் மல்லிகா—தன்னையே பலியாக்கிக் கொண்டாள். அப்போதே நானும் அவளைப் பின் பற்றியிருக்க வேண்டும். ஆனால் நான் என்னை ஏமாற்றிக் கொண்டே வாழ்கிறேன். ஏன்? எதற்காக?

புவனாவுக்காகவா? அவளுக்கு வாழ்வளிக்க அதோ வந்து விட்டான் நவம்.

இதோ இப்போதே இங்கே ஒரு 'தீப-ஆவளி' 'பெற்ரோலும்' 'சிகரட் லைட்டரு'ம் இங்கே தானிருக்கின்றன.

"ஆ! யாரிது? புவனா! விடு கையை!" கையைப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிறாளே! கண்ணீர் வழிமறிக்கிறதே...! அட கடவுளே, நான் செத்துமாறிரித்தான்.

சாக மாட்டேன். நீ அழாதே புவனா! அழாதே! நான் சாகவே மாட்டேன்".

# சித்த சுவாதீனமற்றவர்கள்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, அப்படி ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவரை அனாரின் பராமரிப்புக்காரர் அல்லது உறவினர் அல்லது நண்பர் அவ்விடமிருந்து மீட்கவும் முடியும்; அதாவது தாம் அன்னாரைக் கவனமாகப் பராமரிக்க முடியுமென்று சொல்லி அதை நிறைவேற்றுவதற்காகப் போதிய பிணை கொடுக்க உடன்பட்டால் தேசாதிபதி இது செய்யத் தகுந்தது என அபிப்பிராயப்படும் பட்சத்தில் சித்த சுவாதீனமற்றவரையுடனே மீட்பதற்கு உத்தரவு பிறப்பிப்பார்.

அதைவிட வைத்தியர் நோயாளி குணமடைந்து விட்டாரென அறிவித்தல் கொடுத்தாலும் தேசாதிபதியவரை விடுதலை பண்ணும் படி உத்தரவுபிறப்பிக்கலாம். தண்டனைக் குற்றம் புரிந்து மூளைக் கோளாறின் காரணமாக ஆஸ்பத்திரிக்குப் பாரப் படுத்தப் பட்டவர்களை மேற் கூறியபடி விடுதலை பண்ண முடியாது. வதியவராயிருந்தால் விடுதலைப் படுத்துவது மன்றி அவரின் கிராமம் வரை பிரயாணத்துக்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்து கொடுக்கப் படும்.

எக் காரணம் பற்றியும் மாவட்ட நீதிமன்றத்தால் காவலில் வைக்கப்பட்டு பைத்தியக்கார ஆஸ்பத்திருக்கு ஒருவர் பாரப்படுத்தப் பட்டால், அப்போது அந்நீதிமன்றம் அவரினுடைய பொருளாதார நிலையையறிவதற்கு ஒரு குறுகிய விசாரணை நடத்தி அதன் மூலம் அவர் போதிய ஆதனமுடையவராவென அறிய முயலும். போதிய ஆதனம் இருக்கக்கண்டால் அன்னாரின் ஜீவனாம்சத்துக்குத் தேவையான அளவுக்கு அந்த ஆதனத்திலிருந்து வசூலித்து அத் தொகையை அதற்குப் பயன் படுத்துமாறு உத்தரவிடலாம்.

குற்ற மறியல் சம்பந்தமாக மறியல் கூடத்தில் அடைபட்டிருப்பவர் ஒருவர் சித்தசுவாதீனம் அற்றுப் போனால் உடனே அதை அம் மறியல் கூடமிருக்கும் பகுதியை அடக்கியமாகாண அதிபர் ஒரு வைத்தியரின் அறிக்கையுடன் தேசாதிபதிக்கு அறிவிக்க வேண்டும். தேசாதிபதி உடனே அவரை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிடுவார்; அதன் பிரகாரம் சொஸ்தமாகும்வரை அன்னாரை ஆஸ்பத்திரியில் வைத்திருக்க வேண்டும்.

தனி மனிதனின் சுதந்திர வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்காகவே பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கும் பொறுப்பு தேசாதிபதியின் உத்தரவில் விடப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது; இல்லையேல் குரோதத்தின் நிமித்தம் கீழ் உத்தியோகத்தர்களின் சலுகையுடன் பூரண சித்த முள்ள ஒருவரும் மீளா வேதனைக்கு உட்படுத்தப்படக்கூடும் அல்லவா!


## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

முருகன் (இந்துப்பிட்டி) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபர்ட்டி (பதுளை)

ஆகிய தியேட்டர்களில்



பாக்கிய தேவதை

தன் தங்கையின் நல் வாழ்வுக்காக தன் வாழ்வை தியாகம் செய்தாள் நங்கை

ஜெமினி கணேசன், சாவித்திரி, நம்பியார், ராஜசுலோசனா, கோபால் நடித்தது

பின்னணி: கண்டசாலா — திருச்சி லோகநாதன் — ஜமுனாராணி — சுசீலா.

## 2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் — ரெக்ஸி ஆகிய தியேட்டர்களில்




எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், ஜி. வரலக்ஷ்மி, தாம்பரம் லலிதா நடித்த

ஏ. வி. எம். தயாரிப்பான

மாமியார் மெச்சிய மருமகள்

செல்லமஹால் திரையில்

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசனா நடித்த



பாண்டித்தேவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உண்மை பேசினுல் உயர்வது திண்ணம்

மெய்யூர் என்பது ஓர் ஊர். அவ்வூரில் நல்லான் என்ற பெயருடைய திருடன் ஒருவன் இருந்தான். திருடுவதில் அவன் மிக்க வல்லவன். அவன் யாரிடமும் அகப்படாமல் திருடித் திருடிப் பெரும் பொருள் சேர்த்துவிட்டான்.

ஒருநாள் காலை. நல்லான் படுக்கையை விட்டு எழுந்தான். திடீரென்று அவன் மனதில் திருடுதல் தவறு எனத் தோன்றியது. திருடாமலிருக்க வேண்டுமென்று எண்ணினுன். ஆனுல் அவனுல் முடியவில்லை. மீண்டும் திருடிக்கொண்டுதானிருந்தான். நாள் பல சென்றன.

மெய்யூருக்குப் பக்கத்தில் ஒரு சிறு காடு உண்டு. அந்தக் காட்டில் ஒரு முனிவர் நீண்ட நாட்களாக இருந்து வந்தார். அவரிடம் நல்லான் ஒருநாள் சென்ருன். திருடுவதைவிட்டுவிடுவதற்கு வழியாது எனக் கேட்டான். முனிவர், "உண்மையே பேசுவேன் என்று உறுதிகொள் எல்லா நன்மைகளையும் எய்தலாம்" என்ருர். நல்லானும் அன்று தொட்டு உண்மை பேசி வரலானுன்; பொய் பேசுதலை அறவே விட்டொழித்தான்.

பொய் பேசுதலைவிட்ட நல்லான் திருட்டுத் தொழிலை விடாமல் இருந்தான். ஓரிரவு வழக்கம்போல் திருடுதற்கு உரிய கருவிகளுடன் எல்லாரும் தூங்கிய பிறகு செல்வர்கள் வாழும் தெருவில் அவன் போய்க்கொண்டிருந்தான். அவன் எதிரில் ஒருவன் வந்தான். வந்தவன் நல்லானைப் பார்த்து "நீ யார்! என்ன? எங்குச் செல்கிருய்?" என்று கேட்டான்.

"யான் திருடன். என் பெயர் நல்லான். யான் திருடப்போகிறேன்" என்ருன்.

"நானும் உன்னுடன் வரலாமா?"

"திருடத் தெரிந்தால் வரலாம். சேர்த்துக் கொள்கிறேன்"

"தெரியாது, எனினும் கற்றுக்கொள்வேன்"

"சரி, போகலாம்" என நல்லான் வந்தவனை அழைத்துக் கொண்டான். அரண்மனைக்குத் திருடச் சென்ருன். அமைச்சரது தனிப்பொறுப்பில் அரசனுடைய விலையுயர்ந்த பொருள்கள் இருக்குமிடம் சேர்ந்தார்கள். ஒரு சிறு பெட்டியைத் திறந்தார்கள். மூன்று மாணிக்கக் கற்களைக் கண்டார்கள். இரண்டை எடுத்தான் நல்லான். தான் ஒன்றை எடுத்துக்கொண்டான். மற்ருென்றை உடன் வந்தவனுக்குத் தந்தான். மற்ருென்று அரசனுக்கு இருக்கட்டும் எனக் கூறிச் சென்ருன். இருவரும் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

மறுநாள் காலை மணி பத்தாயிற்று. அரண்மனையிலிருந்து ஒரு சேவகன் நல்லானைத் தேடிக்கொண்டு வந்தான். "அரசன் தங்களை அழைக்கிருர்" என்ருன். நல்லானும் அரண்மனையை நோக்கிச் சென்ருன்.

நல்லான் அரண்மனைக்குள் நுழைகையில் அரசனும் முதல் அமைச்சரும் உரையாடி முடித்தனர். "நேற்றிரவு யாரோ உமது அறையுள் வந்து போனதுபோல் ஓசை கேட்டது. திருடன் வந்திருக்கலாமோ?" என அரசன் அமைச்சரைக் கேட்டனன். அமைச்சர் எழுந்து அறைக்குச் சென்ருர். எல்லாப் பொருட்களும் இருக்கக் கண்டார் மூன்று மாணிக்கங்கள் இருந்த பெட்டகத்தில் ஒன்றே இருக்கக் கண்டார். அதைத் தாம் எடுத்துக்கொண்டார். அரசனிடம் போந்து 'அரசே நம் மூன்று மாணிக்கங்களும் களவுபோய்விட்டன' என்று கூறினுர். அரசர். "மூன்றுமா?" என்ன, அமைச்சர் 'ஆம்' என்ருர்!

'ஆம்' என்று சொல்லி அமைச்சர் அமர்வதற்கு முன் நல்லான் அங்கு வந்தான். அரசர் முன்பு நின்ருன். அரசன் அவனைப் பார்த்து, "நேற்றிரவு பத்து மணிக்குமேல் நீர் எங்கு சென்றீர்? எச்செயல் புரிந்தீர்?" என்று கேட்டார்.

"அரசே! நானும் இன்னொருவருமாகத் தங்கள் அரண்மனையிலிருந்து, இரண்டு மாணிக்கங்களைத் திருடினேம்" என்ருன நல்லான்.

"இரண்டு மாணிக்கங்களையும் என்ன செய்தீர்கள்?"

"என் நண்பருக்கு ஒன்று கொடுத்தேன். என்னிடம் ஒன்று இருக்கிறது. அரண்மனைக் காவலன் வந்து அழைத்தான். அந்த மாணிக்கத்தை எடுத்துக்கொண்டு வந்தேன்"

"அந்த மாணிக்கத்தைத் தருகிறீரா!"

அரசன் அவ்வாறு கேட்டதும் நல்லான் தான்கொண்டு வந்த மாணிக்கத்தை அரசனுக்கு எதிரில் வைத்தான். "உன்னேடு திருட வந்தவன் நான்தான்" என்று கூறிக்கொண்டே அரசன் மற்ருெரு மாணிக்கத்தை அதன் பக்கத்தில் எடுத்து வைத்தான். பின்னர் அமைச்சரை விளித்து, "அமைச்சரே! உம்மிடம் இருக்கும் மூன்ருவது மாணிக்கத்தையும் கொண்டு வந்து வையும்" என்று கூறினுன்! அமைச்சன் தலைகுனிந்துவிட்டான்.

அரசன் அமைச்சனைப் பதவியிலிருந்து நீக்கினுன். நல்லானுக்கு அமைச்சர் பதவி கொடுத்தான். உண்மை உயர்வளித்தது காண்மின்கள்!

—துருகுலம்



பாடசாலைக்கு போவது எப்படி? இந்தப் படத்துக்கு விளக்கம் வேண்டியதில்லை. கூனிக் குறுகி, தள்ளாடி தளர் நடை போட்டுச் செல்லும் நம் தம்பிகள் தங்கைகள் இந்த ஆங்கிலேயப் பள்ளிப் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். தாமும் சிறப்பாகச் செல்லப் பழகிக்கொள்ளவேண்டும்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 5.

பெயர்........................................

பாடசாலை........................................

விலாசம்........................................

........................................

........................................ பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

........................................ கையொப்பம்

# தனித்தியங்கும் தண்டமிழ்

அன்புள்ள மலருக்கு:

வணக்கம். நீர் வரைந்தனுப்பிய வண்ண மடல் கண்டேன். மகிழ்ந்தேன். தமிழ் மீது நீ கொண்டுள்ள தணியா ஆர்வமே என்னை மிகக் கவர்ந்தது. தமிழ்த் தாய் களங்கமில்லாதவள், கற்புள்ளவள். பொற்பிலே பிறந்து, தமிழகப் பொலிவிலே வளர்ந்தவள். வளர்பவள் தூய்மையானவள். ஆம்! "அத்தமிழன்னைதான் எமது அருந்தவப் பேறு. தித்திக்கத் தித்திக்கத் திருவாசகத் தேன் மாரி பொழிந்த மாணிக்கவாசகர், "தீந்தமிழ்" என்று கூறி மகிழ்ச்சியடைந்தார். 'தமிழ்' என்ருல் இனிமை, தமிழும் இனிமை, அதன் பொருளும் இனிமை. பெயரும் இனிமைதான்..............." இவ்வளவு இளமையிலேயே இத்தகைய தமிழார்வம் உனக்கு எப்படித் தங்கையே வந்தது!

தூய்மையான கன்னித் தமிழிலே இல்லாதவை இல்லை. இதை நாம் மட்டுமென்ன நானிலமே ஒப்புகிறது. அதற்குச் சான்ருக மிளிர்கிறதே வள்ளுவன் வண்டமிழ்ச் செல்வம். உலகின் கண் வாழும் எண்பத்தியாறு மொழிகளிலே பெயர்க்கப்பட்டிருக்கிறதே அது.

இவ்வாறு வளமான தமிழ்ச் செல்வம் எமது கரங்களிலே இருக்கிறது. ஆனுல் நமது வாலிபக் கூட்டம் விஞ்ஞானமில்லையே தமிழில்; கலைச் சொற்களில்லையே தமிழில், என்று அங்கலாய்க்கின்றனர். அது மட்டுமா? ... என்று கேட்கிருர்கள். இவர்கள் வேறுயாருமில்லை மலர்! தமிழ்த் தாயின் சேய்கள் தான். அன்னையை அனுதையாக்கி பாற்றுந தாயிடம் பணிடியிடுபவர்கள். பாரத நாட்டிலே இன்னு மொரு இரண்டு வருடங்களில் பல்கலைக் கல்வியாவும் கன்னித் தமிழிலே கறபிககப் போகிருர்கள். ஈழத்திற்தானென்ன? இருமல்லவ, தமிழும் தமிழனும் தலை நிமிர்ந்து தரணியிற் புகழ் பாட ஒரு சர்வகலாசாலை அமைக்கிருர்கள். ஆம்! மலர், இவர்களெல்லாம், வல்ல தமிழில் உள்ள கலைச் செல்வங்களை எமக்களிக்கப் போகிறன்றனர். தமிழ் தனித்தியங்கச் செய்யப் போகிருர்கள்! தமிழில் என்ன இருக்கிறது? எப்படித் தனித்தியங்கப் போகிறது? என்பதற்கெல்லாம் பதில் பளிச்சிடத்தான் போகிறது.

மலர், இவற்றையெல்லாம் நீ கேட்டு உள்ளம் பூரிப்படைவாயல்லவா? அத்தோடு வடமொழிச் சொற்கள் கலக்காமலும், தனித் தமிழிற் சுவையாக எமது தமபி தங்கையர்கள் எழுத வேண்டுமெனவும் சொல்லி வைக்கிறேன். சிலருடைய கடிதங்களிலே ஆங்கிலச் சொற்கள், வடமொழிச் சொற்கள் கலந்திருக்கும். மணிப்பிரபாள நடையென்று கூறுவர். இப்படியெழுதுவதால் அன்னை மாசு படுத்தப்படுகிருளல்லவா?

தனித்துச் சுவைக்கக் கூடிய தமிழை வடமொழியைத் தமிழ் வடிவமாக்கிக் களங்க மேற்படுத்துகின்றனர். இதோ! சில: புஷ்பம்-புட்பம், விசேஷம்-விசேடம், பாஷை-பாடை, சரஸ்வதி-சரசுவதி, புஸ்தகம்-புத்தகம் இப்படித்தான், மாசுபடுத்துகின்றனர். செந்தமிழிலே மலர், சிறப்பு, மொழி, கலைமகள், நூல் இப்படி இனிமையாக எழுதிப் பார் தங்கை உனது தமிழார்வம் போன்று ஒவ்வொரு வாலிபர்கட்கு மிருந்தால் ஈழத்தில் நாமேனித் தனை இன்னலடைய வேண்டும்? அடுத்த அஞ்சலில் இன்னும் பல.

அன்புள்ள அண்ணன்
மதியமுதன்.

# சும்மா.....?

மூன்று பிரிவுகளைக் கொண்டு முத்தமிழ் விளங்குவது போல மூன்று எழுத்துக்களைக் கொண்டு "சும்மா" என்னும் சொல் விளங்குகிறது. இச் சொலலுக்கு உண்மையான-நல்ல கருத்து ஒன்றுமில்லை. சும்மா என்ருல் "ஒன்றுமின்றி" என்னும் பொருள் படிவதாய்த் தெரிய வருகிறது. நீ எங்கு தம்பி வந்தாய்? என்ருல், பையன் "சும்மா வந்தேன்" என்பான். இதை யார் கொடுத்தது? எவ்வளவு காசுக்குக் கொடுத்தார்? என உரியவரைக் கேட்டால், அவர் "இது இன்னுர் சும்மா கொடுத்தார்" எனபார்.

"சும்மா இரு, சும்மா வந்தேன், சும்மா போ: சும்மா சொல்லு, சும்மா கேட்டுப் பார், சும்மா சாப்பிடு, சும்மா குடி, சும்மா இருக்க முடியுமா?,• சும்மா எப்படிக் கொடுப்பது" என்று நாம் பேசுகையில்-அநேக, தடவைகளில் சும்மா என்ற சொல்லும் சும்மாவாவது வந்து வந்து போய் விடும்?

இந்தச் சும்மாவை யான் சும்மா எழுதினுலும் இதற்கு மதிப்புக்கிடைக்கும் என்பது என் எண்ணம்.

—"தாமரைத்தீவான்"
மலேவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் கழகத்தில் அடிகளார் விரிவுரை

"கோவிலிலே மாத்திரம் ஆண்டவன் குடியிருக்கவில்லை. நல்லவர்களிதயத்திலுங்கூட அவன் வாழ்த்தான் செய்கிறான். இதயத்திலே தூய்மையில்லாதவன் இறைவனை நாடுவதில், எவ்வித பயனுங்கிடையாது..."

இவ்வாறு திருவண்ணாமலை மகா சந்நிதானம் தவப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார், புங்குடுதீவு இளைஞர் கழகத்தினர் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

புங்குடுதீவு ஸ்ரீ இராஜேஸ்வரியம்பதி கந்தசுவாமி கோவில் முன்றலில் அணிமையில் நிகழ்ந்த இவ்வைபவத்துக்குப் பேராசிரியர் திரு. சி. இ. சதாசிவம்பிள்ளை தலைமை தாங்கினார்.

அடிகள் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:- "வான் கலந்த மாணிக்க வாசகனின் வாசகத்தை, இளைஞர்களொவ்வொருவரும் உருகி உணர்ந்து கற்க வேண்டும். ஆண்டவனுக்கு அருகாமையில் நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கும் வன்மை திருவாசகத்தேனுக்குண்டு."

புங்குடுதீவு இளைஞர் கழகத் தலைவர் திரு. வே. க. சோமசுந்தரம் அடிகளாரை மலர்மாலையணிந்து வரவேற்றார்.

புலவர்மணி சுந்தரமூர்த்தி, வித்துவான் பொன்னம்பலம் ஆகியோருட்பட அநேகர் சொற்பொழிவாற்றினார்.

செயலாளர் ஐ. சிவசாமி நன்றியுரை கூறினார்.

### கொ-உணுப்பிட்டி பெற்றோர் ஆசிரியர் சங்கம்

வத்தளை உணுப்பிட்டி ஆரம்ப தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்க இரண்டாவது

# கழகச் செய்திகள்

பொதுக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. பொ. நடராசா தலைமையில் அணிமையில் நடைபெற்றது.

"பெற்றோரும்-ஆசிரியர்களும் ஒத்துழைத்தால் தான் மாணவர் தரம் உயர முடியும், அதற்கு இப்படிப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கம் அவசியம்" என பாடசாலை முகாமைக்காரர் திரு. வே. தில்லைநாதன் (வழக்கறிஞர்) கூறினார்.

மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருத்தல் கூடாது. அவர்கள் இயல்-இசை-நாடகக் கலைகளிலும் ஓரளவு பற்றுள்ளவர்களாக விளங்க வேண்டும் அதற்குப் பெற்றோர் ஆசிரிய சங்கம் ஆவன செய்யும் எனத் தலைவர் கூறினார்.

இந்து சன்மார்க்க சங்க ஸ்தாபகரும், நிர்வாக சபை அங்கத்தவருமாகிய திரு. கே. தியாகராசாவின் அகால மரணத்தைக் குறித்து இச்சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கப் பட்டது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. நடராசா (தலைமையாசிரியர்) செயலாளர்: திரு தி. வெற்றிவேலு (ஆசிரியர்) பொருளாளர்: திரு. க. வீரகத்திப்பிள்ளை, உப செயலாளர்: திரு. எம். ஏ. எல். ஸைமித் நிர்வாக சபை அங்கத்தவாளுவர். போஷகர்கள்: திரு. வே. தில்லைநாதன் (முகாமைக்காரர்) திரு. செ. ஆறுமுகம்.

சற்றில் ஆசிரியை திருமதி ம. கதிர்வேல் நன்றியுரை நவின்றார்.

### சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி

"விஞ்ஞான உலகில் இறைவனுக்கு இடமில்லை என்ற தவறான கருத்தை நாட்டைவிட்டு ஓட்ட வேண்டும்" என வித்துவான் அ. கந்தசாமி சண்டிருப்பாய் இந்துக் கல்லூரிக் கலைமகள் விழாவில் பேசும் பொழுது குறிப்பிட்டார் விழாவையொட்டிக் கல்லூரி மாணவன் அ. அனந்தராசா 26 மணி நேரம் தொடர்ந்து சைக்கிள் சவாரி செய்தார். அவருக்கு ஆசிரியர் திரு. எஸ். சண்முகலிங்கம் வெண் கோப்பையொன்றைப் பரிசளித்தார்.

திருக்குறள் மனனப் போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி இக் கல்லூரி முகாமையாளர் திரு. எஸ். தையல்பாகர் பேசினார்.

பல்கலைச் சுவை விருந்திலே, மாணவிகளால் நடிக்கப்பெற்ற "கடன் வாங்கிக் கல்யாணம்" என்ற நாடகமும், ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் நடிக்கப் பெற்ற "எமன் ஏமாந்தான்" என்ற நாடகமும் கூடியிருந்த பெருந்திரளான மக்களின் பாராட்டைப்பெற்றன. கல்லூரிப் பண்ணோடு விழா இனிது முடிவுற்றது.

### சரஸ்வதி பூசைகள்

இலங்கையின் பல பாகங்களிலுள்ள பாடசாலைகளிலும், சங்கங்களின் ஆதரவிலும் சரஸ்வதி பூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. விவரம் பின்வருமாறு:—

பசறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இடம் காசின்லேயைச் சேர்ந்த பிணியப் பின்னைக் கட்டைத் தமிழ் கலவன் பாடசாலை, வெலிமடை வ/யகலருவ அரசினர் சிங்கள, தமிழ் சிரேஷ்ட பாடசாலை தமிழ் பகுதி, வெள்ளாம் போக்கட்டி நெசவு நிலையம், சனசமூக நிலையம், அளவெட்டி, அருணோதய கல்லூரி மற்றும் பல சங்கங்களின ஆதரவிலும் சரஸ்வதிபூசை கொண்டாடப்பட்டது.

### சவேரியார் சன சமூக நிலையம்

புங்குடுதீவு அர்ச் பிரான்சிஸ் சவேரியார் சன சமூக நிலைய கொழும்புக் கிளையின் ஆண்டு நிறைவு விழா கடந்த 20-9-59-ல் நடைபெற்றது. திரு. எஸ். டேவிட் தலைமை தாங்கினார். செயலாளர் திரு. வினஸ் சொற்பெருக்காற்றினார்.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ் இனத்துக்காக அர்ப்பணித்த அரும் பெருந் தலைவர் திரு. கு. வன்னியசிங்கத்தின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் நடப்பு வருடத்திற்கு கீழ்க்கண்டவர்கள் நிலைய நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்: திரு ம. செபஸ்தியாம்பிள்ளை, தலைவர்: எஸ். எம். டேவிட், உபதலைவர்: திரு. அ. கபிரியேல், செயலாளர்: ஆசிரியர் திரு வினஸ், உப செயலாளர்: திரு. டி. [illegible] திருவாளர்கள் கு. அல்

போன்ஸ், ச. அந்தோனிப்பிள்ளை, வி. மலக்கியாஸ் முதலியோர் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

### மூதூர் மத்திய வாசிகசாலை

மூதூர் மத்திய வாசிகசாலையின் பொதுக் கூட்டம் சென்ற 5-10-1959-ல் வாசிகசாலை மண்டபத்தில் சங்க உப தலைவர் ஜனாப் எஸ். வி. முகம்மது தலைமையில் கூடியது. தலைவர் முகவுரையில் சங்கத்தின் வளர்ச்சி பற்றிப் பேசினார்.

சங்க காரியதரிசி ஜனாப் எஸ். எம். எம். யூனை் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தார். 6-ம், 7-ம், 8-ம் வட்டார முஸ்லிம் பெண்கள் இரவு வேளைகளில் மூதூர் அஸிஸ் றைஸ் மில் கிணற்றுக்கு குடி தண்ணீர் எடுக்க செல்வதால் அங்கு ஒரு வெளிச்சமின்றி அவதியுறுகின்றனர் என்றும் இது விஷயமாக போதிய கவனமெடுக்க வேண்டுமென மூதூர் கிராமச் சங்கத்தைக் கேட்டுக் கொள்வதாக ஜனாப் எம். ஏ. ஹமீதால் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

### கம்பளையில் நபி ஜயந்தி விழா

கம்பளை நருமானியா பாடசாலையில் ஜனாப் ஏ. எச். எம். சலாருதீன் மௌலவி ஆசிரியர் தலைமையில் நபி ஜயந்தி விழா பாடசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணம் பாடசாலை மாணவ மாணவிகளால் மௌலூது ஓதப்பட்டது. இடையிடையே மாணவர்களால் இஸ்லாமிய கீதங்கள் பாடப்பட்டன. ஆசிரியர்களான யூ. ஏ. உதுமா லெவ்வை, ஐ. ஏ. றஸ்ஸாக், எம். ஷாஹிர் ஆகியோர்களால் நபிகள் திலகத்தின் வாழ்க்கை முறைகளை எடுத்துக் கூறப்பட்டன. திருவாளர் எம். செல்லையா "மாணவர்களும் சமுதாயமும்" என்னும் பொருள்பட ஓர் அரிய சொற்பொழிவாற்றினார். காரியதரிசி ஏ. சி. எம். நிலவ்பர் நன்றியுரை கூறினார்.

### சென்ற் பீட்டர் மீன்பிடித் தொழிலாளர் சங்கம்

யாழ்நகர் 3-ம் வட்டார மீன்பிடி தொழிலாளரின் நலன் கருதி மேற்படி சங்கம் செனெட்டர் ஞா. நல்லையா தலைமையில் 10-10-59-ல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவர் உரையில் அங்கத்தவர்கள் அனைவரும் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் நேர்மை நெறி தவறாது கூட்டுறவு மனப்பான்மையுடன் உழைத்தல் மிகவும் அவசியம் என்றும், கல்வி கற்றும் தொழில் துறையில் கரையேறாது இருக்கும் வாலிபர்கள் வீண் காலம் கழிக்காது சங்கத்தில் சேர்ந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்யுமாறும் இன்னும் அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய சலுகைகள்யாவற்றையும் தன்னாலானவரை முயற்சிசெய்து பெற்றுத்தருவதாகவும் கூறினார்.

பின்னர் கீழ்க்கண்டவர்கள் நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு ஞா. நல்லையா, நிருவாகசபை அங்கத்தவர்களாக ஏழு பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### இளைஞர் கழகத்தின் அஞ்சலி

"தன்னைத்தானே எரித்து உலகுக்கொளிகாட்டும் மெழுகுதிரியைப்போல தன் வாழ்வை நரகமாக்கிக் கொண்டே, எமது வாழ்வைச் சொர்க்கமாக்க அமரர் வன்னியசிங்கம் முயன்றார். இருண்ட பாதையிலே தளர் நடை போட்டுச் செல்லும் எமக்கெல்லாம்-அமரர் வன்னியசிங்கம் வாழ்ந்து காட்டிய வாழ்வு; ஒரு கலங்கரை விளக்கமாகும்."

அமரர் வன்னியசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கமாக ஸ்ரீ கிராஞ்சியம் பதிகந்தசுவாமி கோவில் முன்றிலில், புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஆதரவில் அணிமையில் நடைபெற்றமாபெரும் அனுதாபக் கூட்டத்தில் பேசிய அரசினர் மகாவித்தியாலய அதிபர் திரு சு. வில்வரெத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு புங்குடுதீவு கிராமச்சங்கத் தலைவர் திரு க. செல்லத்துரை-ஜே. பி. தலைமை தாங்கினார்.

பேராசிரியர் சி. இ சதாசிவம்பிள்ளை உட்பட அநேகர் அமரர் வன்னியசிங்கத்தின் சாதனைகள் குறித்துப் பேசினர்.

அமரரின் ஆத்மசாந்தி குறித்து இரண்டு நிமிட நேரம் மௌனமனுட்டிக்கப் பட்டது.

## தென்னகத்தில்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் இவர் ஒருவரல்லவா என நான் கேட்ட பொழுது அத்தகைய ஒரு வகுப்பு ரீதியான விகிதத்தை அவர் பொதிக செய்தார் எனச் சொல்வது சரியன்று எனக் கல்வி மந்திரியார் இச் சபையில் அறிவித்தார். நான் சொல்வதை நிரூபிப்பதற்கு வேண்டிய சாதனம் என்னிடம் அப்பொழுதிருக்கவில்லை. ஆனால் அது இப்பொழுது கிடைத்திருக்கிறது. தேசிய மொழிகளில் உயர்தரக் கல்வி பற்றி ஆராய்ந்த கமிஷனின் இறுதி அறிக்கையில் இச். சியாக இருக்கிறது. அதை வாசிக்கிறேன்:

> "இந்நாட்டினிற் பெரும் ஆரவாரத்துடன் பேசப்பட்டு வரும் சம சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமாயின் பல்கலைக் கழகத்திற் சேரும் தமிழ் பேசும் மாணவர் ஒவ்வொருவருக்கும் சிங்களம் பேசும் மாணவர் அறுவர் வீதம் சேரக் கூடிய ஏற்பாடு செய்தல் அவசியமென எமக்குத் தோற்றுகிறது".

சம சந்தர்ப்பம் வழங்க வேண்டுமாயின் இத்தகைய வகுப்பு ரீதியான விகிதம் கைக்கொள்ளப் பட வேண்டுமென இப் பெருந்தகையார் சிபார்சு செய்திருக்கிறார். இந்த அறிக்கையில், "இப்பொழுது அரசாங்க மொழித் திணைக்களத்து விசேட கமிஷனராகவுள்ள இவரும், உயர்தரக் கல்வி பற்றிய கமிஷனின் செயலாளராகவிருந்த கலாநிதி என். டி. விசயசேகரா என்பவரும் கைச்சாத்திட்டுள்ளனர். விசயசேகராவே இப்பொழுது அரசாங்க மொழித் திணைக்களத்துப் பிரதிக் கமிஷனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இருவரும் சம சந்தர்ப்பம் என்னும் போர்வையுள் நுழைந்து, உயர்தரக் கல்வியிலும் பல்கலைக் கழகத்தில் மாணவரைச் சேர்ப்பதிலுங் கூட, தகைமை பார்த்துச் சேர்க்கும் கொள்கையை உதறித் தள்ளிவிட்டு, வகுப்பு ரீதியான விகிதத்தைப் புகுத்த விரும்பினர். இவ்விருவரின் தமிழ்-எதிர்ப்பு மனப்பான்மைபற்றி எமக்கு நன்கு தெரியுமாகையால் இம் மொழித் திணைக்களம் பற்றிப் பெரும் கவலை கொள்வதுடன் இவ் விசேட கமிஷனரின் நியமன ஒப்பந்த காலம் மேலும் நீடிக்கப்படுமா வென்பதையும் அறிய விரும்புகிறோம்.

### தமிழ் எதிர்ப்பே சிறப்பியல்பு

இந்த விசேட கமிஷனர், சிங்களத்தைப் பொறுத்த வரையில், எவ்வித சிறப்பியல்பும் உடையவரல்லர் எனக் கொழும்பு மத்திய தொகுதி மூன்றாம் பிரதிநிதி (திரு. பீ. தமிஸ்) கூறியுள்ளார் வேறு ஏதாவது விசேட தகைமையோ சிறப்பியல்போ இவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழைப் பொறுத்தவரையில் அவருக்குள்ள "சிறப்பியல்பு" எதுவெனில் அவருடைய தமிழ்-எதிர்ப்பு மனப்பான்மையேயாகும்; அவர் 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க அதிகாரச் சட்டத்தை நடைமுறையிற் கொண்டு வருவதற்கும் அச் சட்டத்தின் கீழ்த் தேவையான படிவங்களை ஏற்பாடு செய்வதற்கும் [illegible] வடிக்கையும் எடுத்[illegible] விட்டார். —(தொடரும்)

வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிஸைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா-

நவா

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஸ்ரீகிருஸ்ஞ (திருகோணமலை) விஜிதா (மஸகெலியா)

லக்ஷ்மி (ரத்தினபுரி) தீவொளி (நுவரெலியா)

அயன் (மன்னார்) மொடர்ன் (பதுளை)

சரசாவி (அக்கரப்பத்தனை) ஜெமினி (பொகவந்தலாவா)

3-வது வெற்றிவாரம்!



சங்கீதம்·A.M.ராஜா
காமரா·வின்சென்ட்
ஆர்ட்·கங்கா
எடிட்டிங்·N.M.சங்கர்
ஸ்டூடியோ
விஜயா·வாஹினி

உள்ளத்தை உருக்கும் **கதை** மட்டுமல்ல....
நெஞ்சையே கொள்ளை கொள்ளும் **காதல்**
நினைத்து நினைத்து சிரிக்க வைக்கும் **ஹாஸ்யம்**
இவையனைத்தும் கொண்டதுதான்......

வீனஸ் பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

கதை·வசனம்
டைரக்ஷன்
ஸ்ரீதர்

ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி, விஜயகுமாரி,
தங்கவேலு,
நம்பியார்,
நாகேஸ்வரராவ்
மற்றும் பலர்
நடித்தது.



நீண்ட நாட்களுக்குப் பிறகு அருமையான குடும்பக்கதை ஒன்று; திரை ஓவியமாக்கி அளிக்கப்பட்டிருக்கிறது. உள்ளத்தை உருக்குகிறது; உணர்ச்சிகளை மீட்டுகிறது; ஒருகணமும் படத்தில் பதித்த கவனத்தைத் திருப்பாதிருக்கத் தூண்டுகிறது. பார்ப்பவர்களையே கதாபாத்திரங்களாக்கி திரையில் நடப்பதெல்லாம் நமக்கு நடப்பதுபோன்ற உணர்வில் மகிழவும்; நெகிழவும், துவளவும், துணுக்குறவும், கண்ணீர் கொட்டவும்வைக்கிறது படம்.

இப் பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் ... அவர்களால் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 நவம்பர் மாதம் 1-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org